REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN

2020 செப்டெம்பர் 19 சனிக்கிழமை

வரு. 88 இல. 223 | September 19,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

அட்டுலுகம தாக்குதல்;

## சந்தேக நபர்கள் ஏழு பேருக்கு விளக்கமறியல்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

அட்டுலுகமவில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் தொடர்புபட்டவர்களை கைது செய்யச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் சந்தேக நபர்கள் 05 பேர் உட்பட7 பேருக்கு

06

வடக்கில் 22 நலன்புரி முகாம்களிலுள்ள

## 409 குடும்பங்களுக்கு தனி வீடுகள் அமைத்து கொடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை



வட மாகாணத்தில் 22 நலன்புரி முகாம்களில் வாழும் 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

வட மாகாணத்தில் 22 நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து மீண்டும் உடனடியாக அவர்களை குடியேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

## உளுந்து இறக்குமதிக்கான தடையை மறுபரிசீலனை செய்ய பிரதமர் அறிவுறுத்தல்

யாழ். வர்த்தகர் சங்கம் பிரதமரிடம் விடுத்த கோரிக்கைக்கு செவிசாய்ப்பு



உளுந்து இறக்குமதி மீதான தடையை மறுபரிசீலனை செய்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளுக்கு உளுந்து முக்கியத்துவம் பெறுவதனால், உளுந்து மீதான இறக்குமதி தடையை தளர்த்துமாறு யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை ஆராய்ந்த பிரதமர், ஜனாதிபதியின் செயலாளருக்கு நேற்று காலை (18) இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

உளுந்து இறக்குமதி தடைப்பட்டுள்ளமையினால், தமிழர்களின் பிரதான உணவு வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளதை யாழ். வர்த்தக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

06

கண்ணாடி இறக்குமதி செய்வதாக

## 33,000 கி. மஞ்சள், 3,000 கி.உளுந்து சட்டவிரோதமாக இறக்குமதி






படங்கள்: நிஸ்ஸங்க விஜேரட்ன

நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டு விநியோகிப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 33,000 கிலோ மஞ்சள் கட்டிகள் மற்றும் 3,000 கிலோ உளுந்து என்பவற்றை புளுமென்டல் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

புளுமென்டல் பொலிசாருக்கு நேற்று முன்தினம் இரவு 08 மணியளவில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து புளுமென்டல் பகுதியிலுள்ள கட்டடமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவ்வாறு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சள் கட்டிகளும் உளுந்தும் மீட்கப்பட்டன. 03 கொள்கலன்கள் மூலம் விநியோகிக்கப்படவிருந்த நிலையிலேயே இவற்றை பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன், 10 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். இந்த மஞ்சள், கண்ணாடி இறக்குமதி என்ற பேரில் வரிச்சலுகையுடன் இறக்குமதி செய்யப்பட்டவையாகும். மட்டக்குளி, வாழைத்தோட்டம்,

06



தென்னை மரங்களில் ஏறக்கூடிய புதிய கருவியொன்றை பயன்படுத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, தங்கொட்டுவையிலுள்ள தனது தோட்டத்தில் தென்னை மரத்தில் ஏறுவதைப் படத்தில் காணலாம்.
(படம்: புத்தளம் மாவட்ட குறூப் பூர்ணமால்)

## வெளிநாட்டு முதலீடுகளை கவர புதிய தொழில்நுட்பம்

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால்



இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்கம் புதிய நுட்பங்களை அறிமுகம் செய்யவுள்ளதாக நாணய, மூலதன சந்தை மற்றும் தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரான அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

"நாடானது பொருளாதார ரீதியாக பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இன்னும் ஒரு சில மாதங்களில் இது மீள் எழுச்சி பெறும். கடந்த 05 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட சீரற்ற பொருளாதார செயற்பாடுகளே தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாகும்.

கொவிட் 19 தொற்றிலிருந்து நாம் விடுப்பட்டுள்ளோம். இது எமது பொருளாதாரத்திற்கு சாதகமானதாகும் என அவர் இதன் போது தெரிவித்தார்.

கடந்த 05 வருடங்களில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கீடு வீழ்ச்சியடைந்துள்ளது.

06

## சஜித் அணியுடன் இணைந்து கொள்ள UNPக்கு அழைப்பு



பரந்துபட்ட கூட்டணியில் இணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின்

06

## யாழ்.பல்கலை இணையவழி பகிடிவதை; நான்கு மாணவர்களுக்கு கற்றல் தடை

இருவர் விடுதியிலிருந்து வெளியேற்றம்; உபவேந்தர் கடும் நடவடிக்கை

**யாழ்ப்பாணம் குறூப், பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

யாழ். பல்கலைக்கழகத்தில் இணையவழி ஊடாக பகிடிவதை மேற்கொண்டமை தொடர்பில் மாணவர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டு கற்றல் நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டு ள்ளதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

பகிடிவதை தொடர்பில் 4 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அந்த 4 மாணவர்கள் பல்கலைக்கழத்தில் கல்வி கற்பதற்கும், அவர்களுக்கான ஏனைய

06



## வெளிநாடுகளிலிருந்து மேலும் 111 பேர் நாடு திரும்பினர்

வெளிநாடுகளில் தங்கியிருந்த மேலும் 111 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.டுபாயிலிருந்து 22 பேரும், கட்டாரிலிருந்து 52 பேரும், ஜப்பானிலிருந்து 30 பேரும், அவுஸ்ரேலியாவிலிருந்து 07 பேரும் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பீ.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

06

## சமூகத்தில் இனங்காணப்படாவிடினும் கொரோனா அச்சம் முற்றாக நீங்கவில்லை

அவதானம் அவசியம் என இராணுவத் தளபதி வேண்டுகோள்



சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங் காணப்படா விட்டாலும் வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் பொதுமக்கள் இந்த நிலைமைகளை மறந்து சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றாமல் நடந்து கொள்வது பாரதூரமானதாகுமென்று இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.


இராஜகிரியவிலுள்ள கொரோனா கட்டுப்படுத்தல் தேசிய செயற்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம்

06

## த.ம.பே இணைத்தலைமையிலிருந்து இராஜினாமா செய்ய சி.வி. முடிவு

பேரவையை மக்கள் இயக்கமாக நடத்த எடுத்த தீர்மானமாம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**



தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் பதவியிலிருந்து வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் விலகுவதாக அறிவித்துள்ளார்.

தமிழர் தரப்பிலுள்ள கட்சிகள், பொது அமைப்புக்கள் இணைந்த தமிழ் மக்கள் பேரவையின் இணைத்து தலைவர்களில் ஒருவராக விக்னேஸ்வரன் பதவி வகித்து வந்திருந்தார்.

வடக்கின் முதலமைச்சராக இருந்த காலம் முதல்

06

## யாழ். மாவட்ட வீட்டுத்திட்ட பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

அங்கஜன் இராமநாதன் உறுதி



யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றம் மற்றும் வீட்டுத்திட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வீட்டுத்திட்டம், மீள்குடியேற்றம், காணிக்கொள்வனவு மற்றும் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களின் கட்டுமானங்கள் காலதாமதம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (18) தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றம் மற்றும் வீட்டுத்திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாக களவிஜயம்

06



சின்னப்பொடியன் எண்டு சொன்னவை எல்லாம் மூக்கில விரலை வச்சுக்கொண்டு இருக்கினம் பார்த்தியலே....
ஓம், ஓம் போற போக்கில இன்னும் கொஞ்ச நாள்ல மலையகத்தில் வேறு கட்சிகளுக்கு இடமில்லை போலக் கிடக்கு...

## இன்சுலின் உட்பட 33 ஊசி மருந்துகளை இலங்கையில் உற்பத்தி செய்ய தீர்மானம்

தொழிற்சாலையின் நிர்மாணப்பணிகள் நேற்று ஆரம்பம்

**கொக்கலையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

நீரிழிவு நோய்க்கான இன்சுலின் ஊசி மருந்து உட்பட 33 ஊசி மருந்துகளை உற்பத்தி செய்யும் வகையில் கொக்கல்ல சுதந்திர வர்த்தக வலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள ஊசி மருந்து உற்பத்தி தொழிற்சாலையை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நேற்று கொக்கல்ல சுதந்திர வர்த்தக வலயத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மருந்து உற்பத்தி தொழிற்சாலைக்கான நிர்மாணப் பணிகளை அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

06



2020 ஆம் ஆண்டுக்கான 'கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சி' நேற்று ஆரம்பமானது. இலங்கை நூல் வெளியீட்டாளர்களின் சங்கம் 22 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியில் கொவிட் 19 தொற்று சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி மக்கள் பங்கேற்பதை படத்தில் காணலாம்.
(படம்: ரஞ்சித் அசங்க)

## சமூக ஊடகங்களை பயன்படுத்தி நிதிமோசடி

வெளிநாட்டவர் 14 பேர் பொலிசாரால் கைது

சமூக ஊடகங்களை பயன்படுத்தி பொது மக்களிடம் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டுக்காக இதுவரை 14 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சீனா, நைஜீரியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 14 வெளிநாட்டினரே இவ்வாறு இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் சமூக ஊடகங்களை பயன்படுத்தி அண்மைக் காலங்களில் 60 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை பொது மக்களிடமிருந்து மோசடி செய்துள்ளனர்.

06



நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கும் சர்வதேச புலம்பெயர் அமைப்பின் (IOM) இலங்கைக்கான பிரதானி சரத் தாஷ் (Sarat Dash) க்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நீதி அமைச்சில் நடைபெற்றபோது..



கொரோனா தொற்று தீவிரமாக பரவிய காலகட்டத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய பொதுச் சுகாதார பரிசோதர்களுக்கு உத்தியோகபூர்வமாக மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலக முன்னறில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம். சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் இதன் போது கலந்து கொண்டார்.

# அரச, தனியார் துறைகளின் வினைத்திறன் இன்மையே நாட்டின் பொதுப் பிரச்சினை



## அபிவிருத்தி புரட்சிக்கு தயாராகுங்கள் – ஜனாதிபதி

- மாவட்ட ரீதியாக 1,500 புதிய வீடுகள்...
- வீட்டை கொள்வனவு செய்வதற்கு நீண்டகால கடன்...
- 2024 இறுதிக்குள் குறைந்த வருமானமுடைய 70,100 குடும்பங்களுக்கு வீட்டு வசதி
- நிர்மாணப் பணிகள் அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன்
- கட்டப் பொருட்கள் கூட்டுத்தாபனம் புதுப் பொலிவுடன்...

தனது அவதானத்தின்படி நாட்டிலுள்ள பொதுவான பிரச்சினை எவரும் தமது பணிகளை சரிவர செய்யாதிருப்பதாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரச, தனியார் துறைகளில் காணப்படுகின்ற மந்தகதியிலான செயற்பாடுகள் கவலைக்குரிய விடயமாகுமென்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் மக்கள் செறிந்து வாழ்கின்ற நகரங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிர்மாணப் பணிகள் எப்போதும் ஒரே அளவில் இருப்பதை உதாரணமாக குறிப்பிடலாமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து நிர்மாணப் பணிகளையும் உடனடியாக நிறைவு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்ட ஜனாதிபதி, உளப்பாங்கு மாற்றத்துடன், அபிவிருத்தி புரட்சிக்கு தயாராக வேண்டுமென்று அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொண்டார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக (17) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

“அனைத்து குடும்பங்களுக்கும் வசதியான வீடு” பெற்றுக்கொடுப்பது “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தின் எதிர்பார்ப்பாகும். வீடொன்றின் தேவை இருந்தாலும் அதனை தனியாக நிறைவு செய்துகொள்ள முடியாமை பெரும்பாலனவர்களுக்குள்ள பிரச்சினையாகும். நகர, கிராமிய மற்றும் தோட்ட மக்களின் வீட்டுத் தேவையை தீர்க்க வேண்டியது அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையும் வகையிலேயாகும் என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

“உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்” எண்ணக்கருவை அடிப்படையாகக்கொண்டு தனது அமைச்சு ஏற்கனவே கிராம சேவையாளர் பிரிவுகள் ரீதியாக குறைந்த வருமானமுடையவர்களுக்கு 14,022 வீடுகளை நிர்மாணித்து வருவதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த குறிப்பிட்டார். இத்திட்டத்தின் கீழ் ஐந்து வருடங்களில் 70,100 வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 05ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உலக குடியிருப்பு தினத்திற்கு இணையாக “சிறந்த தொடர்மாடி வீட்டுத்திட்டத்தின்” கீழ் வெரெல்லவத்த, மிஹிந்துபுர, பறங்கியா கும்புர, தஹய்யாகம, மத்தேகொட, சொய்சாபுர மற்றும் தங்கல்ல நகரை மையப்படுத்திய வகையில் 1,500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இந்திக்க அனுருத்த மேலும் குறிப்பிட்டார்.









அனைத்து நிர்மாணப் பணிகளுக்கும் அரச, தனியார் இருதரப்பினரையும் இணைத்துக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார்.

வீட்டை கொள்வனவு செய்வதற்கு 6.25 வீத வருடாந்த வட்டி வீதத்தில் 30 வருட காலத்திற்குள் செலுத்தும் வகையில் அரச வங்கி மூலம் கடன் வழங்குவதற்கு பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மத்திய வகுப்பினரின் வருமானத்திற்கு ஏற்ற தொடர்மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்கு அவசியமான காணிகள் அமைச்சுக்கு இலவசமாக வழங்கப்படுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வட மாகாணத்தில் 22 நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து மீண்டும் உடனடியாக அவர்களை குடியேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

நாடு முழுவதும் ஐந்து இலட்சத்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மலசலகூட வசதி இல்லையென சுட்டிக்காட்டிய பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ஷ, சுகாதார வசதிகளை வழங்குவதை துரிதப்படுத்துமாறு குறிப்பிட்டார்.

பழைய தொடர்மாடி வீட்டுத் தொகுதிகளில் உள்ள கழிவகற்றல் கட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமென்று இராஜாங்க அமைச்சர் இந்திக குறிப்பிட்டார்.

கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தை மீண்டும் புதுப்பொழிவுடன் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கூட்டுத்தாபனத்தின் பிரதேச கிளைகளை கட்டடப் பொருட்களை விநியோகிக்கின்ற முகவராக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

கட்டட திணைக்களம், அரசாங்க தொழிற்சாலைகள், திணைக்களம், தேசிய இயந்திர சாதனங்கள் நிறுவனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை கூட்டுத்தாபனம், அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களின் தற்போதைய நிலைமை மேலும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நிர்மாணத்துறை, விவசாயம் மற்றும் விளையாட்டுத்துறைகளில் மறுமலர்ச்சியை எதிர்வரும் வருடத்திலிருந்து எதிர்பார்ப்பதனால் இந்த அனைத்து நிறுவனங்களும் உத்வேகத்துடன் சேவைகளை வழங்க வேண்டுமென்று பெசில் ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

வீடுகள், வீதிகள், பாலங்கள் மற்றும் குளங்கள் அதிக எண்ணிக்கையில் நிர்மாணிப்பதற்கும் புனர்நிர்மாணம் செய்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் நிறுவனங்களை நிர்மாணப் பணிகளுக்கு இணைத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் நிர்மாணத்துறை ஊழியர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பலர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# அமரர் ஹெக்டர் கொப்பேகடுவவின் நினைவு தின நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மலரஞ்சலி

ஹெக்டர் கொப்பேகடுவ நிலையத்தில் நடைபெற்ற, அமரர் ஹெக்டர் கொப்பேகடுவவின் 37ஆவது நினைவு தின நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (18) கலந்து கொண்டார்.

ஹெக்டர் கொப்பேகடுவ மன்றம் மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர், அமரர் ஹெக்டர் கொப்பேகடுவவின் உருவச்சிலைக்கு மலர்ச் செண்டு வைத்து அஞ்சலி செலுத்தினார். இதன்போது ஹெக்டர் கொப்பேகடுவ மன்றத்தினால் பிரதமருக்கு நினைவு பரிசும், நினைவு மலரும் வழங்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான சஷீந்திர ராஜபக்ஷ, அநுராத ஜயரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவவின் குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





2020 செப்டெம்பர் 19 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

18ம் திகதி முதல் 22ம் திகதி வரை
**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.06 |
| அஸர் | 03.15 |
| மஃரிப் | 06.09 |
| இஷா | 07.19 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் புரட்டாசி 03

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: மரண யோகம்
நட்சத்திரம்: அஸ்தம் காலை 7.53
திதி: திரிதியை

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# அரச காணிகளில் கருங்கல் அகழ்வுத் தொழில் குழுவின் அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

## வரிகள், கட்டண அறவீடுகளில் திருத்தம் செய்யவும் முடிவு



அரச காணிகளில் முன்னெடுக்கப்படும் கருங்கல் அகழ்வு தொழில் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் அது தொடர்பான அறிக்கை நேற்று(18) அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

காணி ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.சீ.எம்.ஹேரத்தின் பங்கேற்புடனான குழுவில், 12 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் திட்டங்கள் குறித்து பிரதமர் கேட்டறிந்தார்.

கருங்கல் தொழிலில் ஈடுபடும் வர்த்தகர்கள் நடைமுறையில் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை குறைத்து கொள்வதற்கு பயன்பாடு மற்றும் அகழ்வு கட்டணங்கள் ஒரே முறையின் கீழ் செயற்படுத்தப்படும் வகையில் திருத்தம் மேற்கொள்வதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது அறிவுறுத்தினார்.

அதற்கமைய கருங்கல் அகழ்வு தொழிலில் ஈடுபடுபவர்களின் நிலுவையிலுள்ள வரி கொடுப்பனவுகளை சலுகை முறையின் கீழ் செலுத்தக் கூடியவாறு திருத்தம் மேற்கொள்ளுமாறும் பிரதமர் வலியுறுத்தினார்.

அரச காணிகளில் கருங்கல் அகழ்வு தொடர்பில் அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் போது பல்வேறு நிறுவனங்களுக்கு சென்று பரிந்துரை கடிதங்களை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக இச்சந்திப்பில் கலந்து கொண்ட தேசிய கருங்கல் உற்பத்தி சங்கத்தின் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

அதற்கு தீர்வாக, அகழ்விற்கான அனுமதி பத்திரங்களை வழங்கும்போது பொதுவான ஒரு முறைக்கு உட்படுத்தவும்,

06

உத்தேச 20 ஆவது திருத்தச் சட்டம்

# 22 ஆம் திகதி முதலாம் வாசிப்புக்கு பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அரசியலமைப்பின் உத்தேச 20ஆவது திருத்தச் சட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் தகவலறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

சர்வஜன வாக்கெடுப்பின்றி 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியுமென சட்ட மாஅதிபர் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து அமைச்சரவையிலும் இதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

அமைச்சரவையின் ஒப்புதலின் பின்னர் 20ஆவது திருத்தச்சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த பின்புலத்திலேயே எதிர்வரும் 22ஆம் திகதி முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

20ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆட்சேபனைகள் இருந்தால் ஏழு நாட்களுக்குள் நாட்டு பிரஜைகளால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்ய முடியும். சட்டமூலத்தை எவரும் ஆட்சேபிக்காவிட்டால் ஒருவாரத்தின் பின்னர் அதனை நிறைவேற்றுவதற்கான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றில் இடம்பெறும்.

06

# நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# நல்லாட்சி அரசு, முதலீட்டாளர்களுக்கு சலுகை வழங்காது கமிஷன் கேட்டது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**கொக்கலையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பொருளாதாரத்தில் அக்கறை கொள்ளாத கடந்த நல்லாட்சி அரசாங்கம் முதலீட்டாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு பதிலாக அவர்களிடம் கமிஷன் பெறுவதிலேயே குறியாக செயற்பட்டதென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அத்தகைய சூழ்நிலையிலேயே சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ள பின்வாங்கினர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொக்கலை சுதந்திர வர்த்தக வலயத்தில் நேற்று நடைபெற்ற மருந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் விளக்கமளித்த அவர்,

நாட்டில் மருந்து உற்பத்திகள் ஆரம்பிக்கப்படும் போது அதனை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆறு மாதங்களுக்குள்

06

# ஆண்டுதோறும் ஆறு சதவீதமான மின்சார தேவை நாட்டில் அதிகரிப்பு

## 2023 இல் அதனை ஈடு செய்வதே இலக்கு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

2015/2019 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 30 மெகா வோல்ட் மின்சாரம் மாத்திரமே தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் 06 சதவீதம் மின்சாரத் தேவை அதிகரித்த வண்ணமுள்ளது. அதனால் எதிர்காலத்தில் நாடு முகங்கொடுக்கவுள்ள பிரச்சினைகளை தவிர்க்க முடியாதென மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டளஸ் அழகப்பெரும தனியார் மின் உற்பத்தி நிலையமொன்றுக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எமக்கு ஏன் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் உற்பத்திக்காக செயற்படும் செயற்றிட்டங்களை செயற்படுத்தாது பொறுப்பற்ற விதத்தில் தான்தோன்றித்தனமாக செயற்பட்டுள்ளனர். தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டுள்ளனர். வரலாற்றில் இடம்பெற்ற தவறுகளை மறுசீரமைக்கவே நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் பிரகாரம் 2030ஆம்

06

# கடல்வழியாக கொண்டுவரப்பட்ட 1,000 கிலோ மஞ்சள் மூடைகள்



**முன்னேஸ்வரம் குறூப் நிருபர்**

சட்டவிரோதமாக கடல்வழியே நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 1000 கிலோ மஞ்சள் கட்டிகள் நேற்று அதிகாலை சிலாபம் கடற்பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளதாக

06

# அமெரிக்கத் தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்திலுள்ள சபாநாயகரின் அலுவலகத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் யூ.எஸ்.எயிட் இன் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜெப்ரி சனின் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் இதில் கலந்து கொண்டிருந்தார்.

'வந்தே பாரத் மிஷன்'

# நாடு திரும்ப முடியாமலிருந்த 154 இந்தியர்கள் விசேட விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பு

நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருந்த குழந்தை ஒன்று உட்பட 154 இந்திய பிரஜைகள் விசேட எயார் இந்தியா விமானம் (AI 1284) மூலமாக (17) கொழும்பிலிருந்து பெங்களூரு மற்றும் டில்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கொவிட்19 காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் உலகளவில் சிக்கியிருக்கும் இந்திய பிரஜைகளை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான, இந்திய அரசின் "வந்தே பாரத் மிஷன்" திட்டத்தினுடைய ஓர் அங்கமாக இந்த விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எயார் இந்தியா, தனியார் மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள், வாடகை விமானங்கள், கப்பல் சேவைகள் மற்றும் தரை மார்க்கமான சேவைகள் உட்பட பல்வேறு வழிகளூடான உலகளாவிய பயணச் சேவைகளின் காரணமாக வந்தே பாரத் திட்டத்தின் கீழ் 1.3 மில்லியனுக்கும் அதிகமான இந்தியர்கள் இதுவரையில் இந்தியாவுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

வந்தே பாரத் திட்டத்தின் ஆறாம் கட்ட நடவடிக்கைகள் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு மேற்கொள்ளப்பட்ட கப்பற் சேவை, எட்டு விசேட ஏர் இந்திய விமான சேவைகள், ஏனைய பல விசேட விமான சேவைகள் மற்றும் நேற்றைய விமான சேவை உட்பட்ட சேவைகள் மூலமாக 2000க்கும் அதிகமான இந்திய பிரஜைகள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இந்த விமானத்திற்கான பயணிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இதுவரையில் தம்மை இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையத்தளத்தில் பதிவு செய்ய தவறியிருப்பின் கீழ்வரும் இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள் *https://hcicolombo.gov.in/COVID_helpline*

# உலக சந்தையில் தேங்காய் சார்ந்த பொருட்களுக்கு கேள்வி அதிகரிப்பு

உலக சந்தையில் தேங்காய் சார்ந்த பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையாலேயே இலங்கையில் தேங்காயின் விலை அதிகரிப்பதற்கு காரணமென தேங்காய், பனை மற்றும் கித்துல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ நேற்று தங்கொட்டுவையிலுள்ள தனது தோட்டத்தில் தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறித்ததுடன், தேய்காயின் விலை 100 ரூபாவரை உயர்வடைந்துள்ளதால் தென்னை மரத்தில்

06

# 497 ஜெலிக்னைட் குச்சிகளுடன் கிண்ணியாவில் ஒருவர் கைது

## முச்சக்கரவண்டியும் பறிமுதல்




**திருமலை மாவட்ட விசேட, ரொட்டவெவ குறூப் நிருபர்கள்**

குருணாகல் பகுதியிலிருந்து கிண்ணியா பகுதிக்கு ஜெலிக் நைட் குச்சிகளை முச்சக்கர வண்டி ஒன்றில் கொண்டு வந்த நபர் தம்பலகாமம் கோயிலடி சந்தியில் வைத்து தம்பலகாமம் பொலிஸ் விசேட அதிரடி படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கிண்ணியா அண்ணல் நகர் பகுதியைச் சேர்ந்த (வயது 54) குடும்பஸ்தார் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். தம்பலகாமம் பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் பேரில் இவரே செலுத்தி வந்த முச்சக்கர வண்டியை மறித்து பரிசோதனை நடத்திய பொலிஸார் இவரிடமிருந்து 497 ஜெலிக் நைட் குச்சிகளை கைப்பற்றினர்.

இது தொடர்பாக தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை

06

அரச நிறுவனங்களில் முறைகேடு

# எவராக இருப்பினும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அரசு நிறுவனங்களில் முறைகேடு செய்யும் அனைத்து நபர்களுக்கும் எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பாதுகாப்பு செயலாளர் (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உழைப்பவர்கள் அனைவரும் தங்கள் கடமையை மகிழ்ச்சியுடன் சரியாக செய்ய வேண்டும்.

சிறிய மனிதர்கள் மகிழ்ச்சியாக இல்லாவிட்டால் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ள முடியாது. நிலம் கொள்ளையடிக்கப்படுவது தொடர்பில் கண்டறிய விசேட பிரிவொன்றை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குற்றப்புலனாய்வு பிரிவில் உருவாக்கியுள்ளேன்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக அரச சேவையில் பணிபுரிந்துவிட்டு வீடொன்று இல்லாது வாடகை வீட்டில் சிலர் வாழ்க்கின்றனர். வழங்கப்படும் அனைத்து வங்கிக் கடன்களையும் பெற்றுக்கொண்டு எங்காவது ஒரு காணியை வங்கிவிட்டு ஏழு அல்லது எட்டு மாதங்களுக்குப் பிறகு அங்குச் சென்று பார்த்தால் அந்த நிலத்தில் வேறு எவராவது இருப்பார். இதுதான் நிலையாகவுள்ளது.

06

# 06 பிரதான பொறியியல் பீடங்களுக்கு மேலதிகமாக 405 பேர் இணைப்பு



நாட்டிலுள்ள பிரதான 06 பொறியில் பீடங்களில் 405 மாணவர்களை மேலதிகமாக இணைத்துக்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.


உயர்கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் இங்கு தெரிவித்துள்ளதாவது,

பேராதனை, ஜயவர்தனபுர, ருஹுணு, மொரட்டுவை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஆறு பல்கலைக் கழங்களில் பொறியியல் பீடங்கள் உள்ளன. இந்த ஆறு பீடங்களுக்கும் மேலதிகமாக 405 மாணவர்களை இவ்வருடம் இணைத்துக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சராக நானும் அரசாங்கமும் பல்கலைக்கழங்களில் நிர்வாக செயற்பாடுகளுக்குள் தலையீடு செய்ய எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதி முன்னிலைமைப்படுத்தியுள்ள சுபீட்சத்தின் நோக்கு என்ற கொள்கைக்கமைய செயற்படுவதே எமது இலக்காகும். பல்கலைக்கழக கல்விக்கும் தொழில் சந்தைக்குமிடையிலான பொருத்தமற்ற நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். அதன் பிரகாரம் இம்முறை 405 மாணவர்கள் மேலதிகமாக பொறியில் பீடங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டவுள்ளனர் என்றார்.

# அப்துர் ரஹ்மான் ஜிப்ரி மௌலானா காலமானார்

**பேருவளை விசேட நிருபர்**




சவூதி அரேபியா, மதீனாவைச் சேர்ந்த பேரறிஞரும் பிரபல பரோபகாரியுமான அஸ்ஸெய்யித் ஹபீப் உமர் பின் அப்துர் ரஹ்மான் ஜிப்ரி மௌலானா நேற்று முன்தினம் மாலை மதீனாவில காலமானார்.

இஸ்லாமிய தஃவாப் பணியை சர்வதேச ரீதியாக மேற்கொண்ட இப்பெரியார் ஆன்மீக கல்வி, சமய முன்னேற்றத்திற்காக உலகின்

06

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 03ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 01



### குறள் தரும் சிந்தனை

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப் பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட மிக்க இனிமை உடையதாகும்.

# மலையக மாணவர் கல்வி மீது கூடுதல் கரிசனை அவசியம்

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவுகளில் கற்கின்ற மாணவர்களுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸிடம் வேண்டுகோள் முன்வைக்கப் பட்டுள்ளது. இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் இவ்வேண்டுகோள் தொடர்பான கடிதமொன்றை பேராசிரியர் பீரிஸுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அச்சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்தில் க. பொ. த. உயர்தரம் கற்கின்ற தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு அதற்கான பாடசாலைகள் இல்லாதது பெரும் குறையாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக பெருமளவு மாணவர்கள் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளைத் தவிர்த்து விட்டு கலை, வர்த்தகப் பிரிவுகளில் கற்க வேண்டிய நிலைமை ஏற்படுவதாகவும் இலங்கை ஆசிரிய சேவை சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதன் காரணமாக விஞ்ஞான, கணித பிரிவுகளில் கற்கும் நோக்குடன் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களில் பலர் வேறு மாகாணங்களை நாடிச் செல்வதாகவும் தெரியவந்துள்ளது. மாணவர்கள் கல்வி கற்பதற்காக தங்களது மாகாணத்தை விட்டு மற்றொரு மாகாணத்துக்குச் செல்வதென்பது கவலைக்குரிய விடயமாகும்.

அதேசமயம், இவ்விடயத்தில் மற்றொரு பிரச்சினையும் தலைதூக்குகின்றது. சப்ரகமுவ மாணவர்கள் மற்றொரு மாகாணத்துக்குச் சென்று கல்வி கற்று க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் போது, பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கையில் சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது.

மற்றொரு புறத்தில் இம்மாணவர்கள் வேறு மாகாண பாடசாலையில் அனுமதி பெறுவதென்பதும் இலகுவான காரியமல்ல. அம்மாணவர்களை உள்வாங்கிக் கொள்வதற்கு மற்றைய மாகாணப் பாடசாலைகள் மறுப்பதும் உண்டு. இந்நிலையில் இம்மாணவர்கள் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும் போராட்டங்களையே சந்திக்க வேண்டியிருக்கின்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரேயொரு வழிதான் காணப்படுகின்றது. சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ்மொழி மூல விஞ்ஞான மற்றும் கணித பிரிவுக்கான ஆசிரியர் வளத்தையும், பாடசாலைகளுக்கான பௌதிக வளத்தையும் அதிகரித்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இவ்விடயத்தில் அங்குள்ள சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடுதல் கவனம் செலுத்தி உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். இலவசக் கல்வியின் பயனை நாட்டின் அனைத்து பிரதேச மாணவர்களுமே பெற்றுக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர் என்பதை மறந்து விடலாகாது.

இலவசக் கல்வியின் பலாபலன்களை நாட்டின் அனைத்து இன மக்களுமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அரசாங்கத்தின் உறுதியான கொள்கையாகும். ஆனால் பிரதேசங்களில் நிலவுகின்ற இவ்வாறான குறைபாடுகளை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு அப்பிரதேசங்களின் மக்கள் பிரதிநிதிகளையே சார்ந்ததாகும்.

மலையக மாணவர்களின் கல்வி விடயத்தில் நீண்ட காலமாகவே குறைபாடுகள் நிலவி வருகின்றன. க. பொ. த சாதாரண தர வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு அங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்நிலையில் க. பொ. த சாதாரண தர வகுப்புக்குப் பின்னர் உயர் தரம் கற்க வேண்டிய மாணவர்கள் கலைப் பிரிவிலேயே கற்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது.

க. பொ. த உயர்தர வகுப்புகளில் கற்பிப்பதற்கும் கணித, விஞ்ஞான பிரிவுகளில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது. இதன் காரணமாக உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவில் கற்பதை மாணவர்கள் பலர் தவிர்த்தும் வருகின்றனர். இவ்வாறான நிலைமை மாணவர்களைப் பொறுத்தவரை பரிதாபம் நிறைந்ததாகும்.

எமது நாட்டில் வாழ்கின்ற ஒரு பகுதி மாணவர்களுக்கு இவ்வாறு கல்வி வாய்ப்பு மறுக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படலாகாது.

பொதுவாகவே மலையக மக்களில் கூடுதலானோர் வறிய நிலையிலேயே வாழ்கின்றனர். அக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இலவசக் கலவியையே பெரிதும் நம்பியுள்ளனர். தனியார் வகுப்புகளுக்குச் செல்வதற்கான பண வசதி அம்மாணவர்களிடம் இல்லை. மலையகப் பிரதேச மாணவர் மத்தியில் கல்வி நிலைமை அபிவிருத்தியடையாமல் இருப்பதற்கு பாடசாலைகளில் நிலவுகின்ற ஆளணி, பௌதிக வள குறைபாடுகள் மாத்திரம் காரணமல்ல. வறுமையும் ஒரு காரணமாகும்.

மலையகப் பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமே, அம்மாணவர்களின் கல்வித் தரத்தை முன்னேற்றமடையச் செய்ய முடியும்.

editor.tkn@lakehouse.lk

# அமைதி என்பது மனிதனின் அடிப்படைத் தேவை

## பிரேம் ராவத் அவர்கள் மலேசியாவில் மூன்று மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தன்னார்வ அமைதிப் படை அமைப்பின் முன்பு ஆற்றிய உரையிலிருந்து...



ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையான ஒரு தேவை இருக்கின்றது. வாழ்வில் அமைதி இருக்க வேண்டும் என்பதே அந்தத் தேவையாகும். நாம் அடிப்படை விடயங்களை மறக்கும் போது எமது சமநிலையை இழக்கின்றோம். உங்களுக்கு ஒரு அருமையான கதையைக் கூறுகின்றேன்.

சக்தி வாய்ந்த மந்திரவாதி ஒருவர் இருந்தார். அவருக்கு குழந்தைகள் இல்லை, அவருடைய மனைவி எப்போதும் 'எங்களுக்கு ஒரு குழந்தை இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும்' என்று கூறுவார். ஒரு நாள் மந்திரவாதி சாலையில் போய்க் கொண்டு இருந்த போது ஒரு சுண்டெலியைக் கண்டார். அது காயப்பட்டுக் கிடந்தது. அதைக் கையில் எடுத்து தனது சக்தியால் ஒரு அழகான சிறு குழந்தையாக மாற்றினார். தனது மனைவியிடம் சென்று "நீ எப்போதும் ஒரு குழந்தை வேண்டும் என்று கேட்டாய், இதோ உனக்காக அழகான ஒரு பெண் குழந்தையைக் கொண்டு வந்திருக்கின்றேன்" என்று கூறி அவளிடம் கொடுத்தார். அவர்கள் அந்தக் குழந்தையிடம் மிகவும் அன்பு செலுத்தினார்கள். அவளுக்கு கல்வி புகட்டி நன்றாக வளர்த்து வந்தனர்.

அவள் வளர்ந்து வந்த போது மிகவும் அழகான பெண்ணாக மட்டுமல்ல, மிகவும் புத்திசாலியாகவும், நற்பண்பு கொண்டவளாகவும் இருந்தாள். ஒரு நாள் மந்திரவாதி அவளிடம் "நீ திருமணம் செய்து கொள்ளும் வயதை அடைந்து விட்டாய். நீ யாரை திருமணம் செய்ய விரும்புகின்றாய்"? என வினாவினார். அவள் யோசித்து விட்டு "அதற்கான சாத்தியங்கள் என்ன?" என்று கேட்டாள். மந்திரவாதியும் "நான் உனக்கு பொருத்தமானவர்களை அணுகி அவர்களின் விருப்பத்தையும் சம்மதத்தையும் பெற்ற பின் உனக்கு தெரிவிக்கின்றேன்" என்றான்.

மந்திரவாதியும் வலிமை மிக்க பிரம்மாண்டமான மலை ஒன்றிடம் சென்று அந்த மலையை நோக்கி 'நீங்கள் என் மகளை திருமணம் செய்ய விரும்புகிறீர்களா?' என்று கேட்டார். மலையும் "நான் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் மிகவும் அழகானவள், புத்திசாலி, மிகவும் கனிவானவள், ஆகையால் நான் அவளை என் மனைவியாக்குவதற்கு விரும்புகிறேன்" என்றது.

அவர் மகளிடம் சென்று "மகளே, மலை உன்னை திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றது. மலை சக்தி வாய்ந்தவர், வலிமையானவர். நீ அதை திருமணம் செய்ய விரும்புகின்றாயா?" என கேட்க மகள் மலையை திருமணம் செய்ய மறுத்து விட்டாள்.

பின்னர் கடலை அணுகி அதன் விருப்பத்தைக் கேட்டார். மகளுக்கு கடலின் சம்மதத்தை தெரிவித்த போது, "நான் கடலை திருமணம் செய்ய விரும்பவில்லை" என்றாள். மேலும் அரசர்கள், இளவரசர்கள், பேரரசர்கள் என பலரையும் அவள் நிராகரித்தாள்.

நீ எல்லா மணமகன்களையும் நிராகரித்து விட்டாய், "உனக்கு விருப்பமான யாராவது இருக்கிறார்களா" என வினாவினான் மந்திரவாதி. அத்தருணத்தில் ஒரு சுண்டெலி அந்தப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்தது. அவள் அதைப் பார்த்ததும் "நான் இதைத்தான் திருமணம் செய்ய விரும்புகின்றேன்" என்று கூறினாள்.

மந்திரவாதி முன்பு அவள் யாராக இருந்தாள் என்பதை நினைவு கூர்ந்தார். அவளை மனிதனாக மாற்றி எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தும் அவளது சுபாவம், இயல்பு மாறவில்லை. பல விடயங்கள் அவளின் வாழ்க்கையில் நடைபெற்ற பொழுதும் அவள் பழைய விடயங்களை மறக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டான். மலை, கடல், அரசன், இளவரசன் மற்றும் பேரரசர்கள் எல்லாவற்றையும் விட ஒரு அழகான சுண்டெலிதான் அவளைக் கவர்ந்தது. ஏனென்றால் அது அவளுடைய இயல்பில் சுபாவத்தில் இருந்தது.

கதையின் அர்த்தம் என்னவென்றால், நாம் இந்த உலகில் வாழ்கிறோம், தொழில்நுட்பம் மாறி விட்டது, பல விஷயங்கள் மாறி விட்டன. ஆனால் நாம் இன்னும் மனிதர்கள்தான். இங்கே கேள்வி என்னவென்றால், 'ஒரு மனிதன் என்றால் என்ன?' உலகெங்கிலும் நான் மக்களிடம் இந்தக் கேள்வியை கேட்கும் போது, ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு மனிதன் என்று சரியான பதிலை சொல்வான் என நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால் அப்படியல்ல, யார் என்பதை மட்டுமல்ல உண்மையான தேவைகள் என்ன என்பதையும் மனிதர்கள் மறந்து விட்டார்கள்.

தேவை மற்றும் விருப்பம் என்பதற்கு இடையில் உள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எவை இல்லாமல் உங்களால் உயிர்வாழ முடியாதோ அதுவே உங்கள் 'தேவை'. உங்களுக்கு காற்று, உணவு மற்றும் தண்ணீர் என்பன அத்தியாவசியத் தேவைகளாகும். தொலைக்காட்சி பார்ப்பது உங்களது விருப்பம். காற்று இல்லையேல் நீங்கள் இறந்து விடுவீர்கள். ஆனால் தொலைக் காட்சியைப் பார்க்கவில்லை என்றால் நீங்கள் இறந்து விட மாட்டீர்கள். ஆனால் சமுதாயத்தில் நான் தொலைக் காட்சியைப் பார்க்கா விட்டால் இறந்து விடுவேன் என்று நினைக்கும் அளவுக்கு நாம் மனதளவில் மாறி விட்டோம். இந்த உலகம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றதோ அவற்றிற்கே நாமும் மதிப்பும் முக்கியத்துவமும் அளிக்கின்றோம். ஆனால் நாம் உண்மையென விளங்கிக் கொள்ளும் விடயங்களிற்கு ஒருபோதும் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

நான் இங்கு வந்து அமைதி பற்றி பேச வேண்டிய நிலையில் இருப்பது கவலைக்குரிய விடயம் என நினைக்கின்றேன். நான் அமைதி பற்றி இங்கு பேச வேண்டியதில்லை. ஏனெனில் ஏற்கனவே எல்லோருக்குமே அமைதி என்பது ஒரு தேவையென தெரிந்திருக்க வேண்டிய விடயமாகும். 'அமைதி என்பது ஒரு தேவை'. அமைதி இல்லாமல், உங்களுக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது, மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் பணம் இல்லாமல், நீங்கள் வளமாக வாழ முடியாது.

இந்த உலகில் நமக்கு இருக்கும் சவால் என்னவென்றால் நாம் நம்முள் உள்ள அடிப்படையான விடயங்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும், அமைதியை வேறெங்கோ இருந்து கொண்டு வரவேண்டும் என்று மக்கள் நினைக்கின்றார்கள். நான் அமைதியைத் தேடுகிறேன் என்று நீங்கள் கூறினால், நீங்கள் அதைக் கண்டு கொள்ளவே மாட்டீர்கள் என நான் பதிலளிப்பேன். ஏனெனில் அமைதி உங்களினுள்ளே ஏற்கனவே இருக்கின்றது. 'அமைதி உங்களில் இல்லை' என்ற அனுமானமே உங்களுள் தேடலைத் தூண்டுகிறது. உங்களினுள் அமைதி இருப்பதை அறியாததனால் உங்கள் அனுமானமே தவறாகி விடுகின்றது.

நல்லது, கெட்டது, சரி,பிழை எல்லாமே உங்களிடமே உள்ளது. இந்த உலகில் மிகவும் மோசமான நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அமைதி எவ்வாறு சாத்தியம்? என பலரும் கேட்கின்றார்கள். உண்மைதான், இந்த உலகில் மோசமான விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு மனிதனிலும் 'நல்ல' குணங்களும் உள்ளன. ஆனால் அவை நன்றாக வளர்க்கப்படவில்லை, பேணப்படவில்லை. பராமரிக்கப்படவில்லை. அதுவே மோசமான விடயங்கள் நடைபெறுவதற்கும், அமைதியின்மைக்கும் காரணமாக இருக்கலாம்.

உலகத்தின் நிலைமை இதுதான். ஆனால் உங்கள் நிலைமை என்ன? நாங்கள் மனிதர்கள். நாம் பணத்தைப் பற்றி மட்டுமே நினைப்பவர்களல்ல. நாங்கள் கருணை, தாராள மனப்பான்மை, அன்பு, உணர்வு, மற்றும் புரிந்து கொள்தல் என்பதைப் பற்றியவர்கள். நீங்கள் உங்களுக்கு மட்டுமல்ல, சக மனிதர்களுக்கும் மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தினருக்கும், நீங்கள் விரும்பும் எவருக்கும் வழங்கக் கூடிய பரிசுகள் இவை. இவ்வாறான பரிசு பற்றிய அழகான விஷயம் என்னவென்றால், நீங்கள் அதை பகிர்ந்து கொண்டால் அது மேலும் மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது. பணம் அப்படி அல்ல. கொடுக்கும் போது உங்களிடம் இருக்கும் பணம் குறையும். அதனால்தான் மக்கள் மற்றவர்களுக்கு பணத்தைக் கொடுக்காமல் தமக்காக சேமிக்க முயற்சிக்கிறார்கள்.

உங்களிடமிருந்தே அமைதி தொடங்குகிறது. அது மிகவும் எளிதானது, நீங்கள் யார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். 'உங்களை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்' என்று சாக்ரடீஸ் சொன்னதில் தவறேதுமில்லை.

**மேலதிக விபரங்களுக்கு:**

https://www.timelesstoday.tv/
https://www.tprf.org/peaceeducationprogram/
https://www.premrawat.com/engage/peakknowyourself
https://www.youtube.com/c/PremRawatOfficial/featured
Or WhatsApp +94777793140

தொகுப்பு:
**இ.மனோகரன்...**

# அபிவிருத்தி காண வேண்டிய மல்வத்தை வைத்தியசாலை



அம்பாறை நகருக்கு கிழக்காக 9 மைல் தொலைவில் முக்கிய கேந்திர மையமாகத் திகழும் மல்வத்தை சந்தியில் இருந்து அப்பிரதேச மூவின மக்களுக்கான வைத்திய வசதியை வழங்கி வருகிறது ஒரு வைத்தியசாலை.

அதுதான் மல்வத்தை ஆரம்ப வைத்திய பராமரிப்புப் பிரிவு வைத்தியசாலை.

இத்தமிழ்க் கிராமம் கடந்த காலங்களில் அவ்வப்போது பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர நேரிட்டது. 1990களில் இறுதியாக இடம் பெயர்ந்து காரைதீவு, தம்பிலுவில் போன்ற பகுதிகளில் வாழ்ந்த வரலாறும் உள்ளது. 1994 பிற்பகுதியில் மீள்குடியேற்றம் இடம் பெற்றது. அத்தருணத்தில் வைத்தியசாலையின் அவசியம் உணரப்பட்டது.

1995களில் அமைச்சர் அஷ்ரப் காலத்தில் மத்திய மருந்தகமாக ஆரம்பமான இவ்வைத்தியசாலை 2001இல் அமைச்சர் தயாரத்னவின் காலத்தில் மத்திய மருந்தகத்துடன் மகப்பேற்றுமனையும் அமையப் பெற்று தரமுயர்த்தப்பட்டது.

இதற்கு உள்ளூர் மட்டத்தில் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களாகவிருந்த சோ.புஷ்பராசா, த.கலையரசன், சம்மாந்துறை உதவித் தவிசாளராகவிருந்த வெ.ஜெயச்சந்திரன், இறுதியாக முன்னாள் அமைச்சர் வி.முரளிதரன் (கருணா) போன்றோர் முயற்சியெடுத்ததை மறுக்க முடியாது. வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரும் அடிக்கடி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு முயற்சியெடுத்தனர்.

இன்றைய புதிய கட்டமைப்பில் இவ் வைத்தியசாலை ஆரம்ப வைத்திய பராமரிப்புப் பிரிவு வைத்தியசாலையாக இயங்கி வருகிறது. இதனை பிரதேச வைத்திய சாலையாக தரமுயர்த்த வேண்டுமெனப் பலரும் அழுத்தம் கொடுத்து வந்தனர்.

அதன் பலனாக சுகாதார அமைச்சின் அண்மைய அறிவித்தலின்படி பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படவிருக்கிறது.

அழகான சிவப்பு நிற பெயர்ப்பலகையுடன் கூடிய அவ்வளாகத்தினுள் நுழைந்ததும் அங்கு அம்புலன்ஸ் நிற்பது தெரிந்தது. அருகில் மகப்பேற்று மருத்துவமனை உள்ளது. உள்ளே சென்று பார்த்த போது அங்குள்ள கட்டில்கள் வெறிச்சோடிக் கிடந்தன. யாருமில்லை. அதற்கான தாதிய உத்தியோகத்தர், டொக்டர் இல்லாமையே காரணமெனத் தெரியவந்தது.

இருக்கின்ற டொக்டர் காலை முதல் பிற்பகல் 4.30மணி வரை பூரண சேவையையாற்றி வருகிறார். அதுவே இப்பிரதேச ஏழை மக்களுக்கு வரப்பிரசாதமாகும். ஆனால் பிற்பகல் 5மணிக்குப் பிறகு வரும் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்ய யாரும் இல்லை. அம்பியூலன்சில் அனுப்பவும் பரிந்துரைக்க யாரும் இல்லை. இக்குறைபாடு வைத்தியசாலை வெகுவிரைவில் தரமுயர்த்தப்பட்டதும் நீங்குமென எதிர்பார்க்கலாம்.

எனினும் முன்பிருந்ததை விட வைத்தியசாலை சூழல் துப்புரவாக சுகாதாரப் பேணலுடன் காட்சியளித்தது. வெளிநோயாளர் பிரிவுக்கு மக்கள் வந்து கொண்டிருந்தனர். இருக்கின்ற சிறுவளங்களைக் கொண்டு அங்கு சிறப்பான வைத்தியசேவை ஆற்றப்பட்டு வருவதை நேரடியாகக் காண முடிந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் குண.சுகுணனின் ஏற்பாட்டில் அண்மைக் காலமாக இங்கு இரத்த ப் பரிசோதனைக்கான வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதால் இங்குவரும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது.

மிகவும் பின்தங்கிய அப்பிரதேச மூவின மக்களுக்கும் பொதுவாக மனிதாபிமான சேவையை வழங்கி வரும் இவ்வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டு கூடுதல் சேவையை ஆற்ற வேண்டும் என்பது பலரதும் எதிர்பார்ப்பாகும்.

வெளிநோயாளர் பிரிவுக்குச்சென்றதும் மக்கள் கூடுதலாக இருந்தனர். அங்கு சுகாதார ஊழியர் அவர்களது பெயர்களை அன்புடன் விசாரித்து பதிந்து கொண்டிருந்தார். வெளிநோயாளர் பிரிவு மிகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருந்தது.

அங்குள்ள ஒரேயொரு வைத்தியஅதிகாரியான டொக்டர் கௌரி நோயாளிகளை மிகவும் அன்பாக பொறுமையுடன் கவனித்துக் கொண்டிருந்தார். சிங்களப் பெண்மணியானாலும் தமிழில் நோயாளிகளுடன் அளவளாவி சிகிச்சையளிப்பதை நேரடியாகக் காண முடிந்தது.

அவர் கூறியதாவது, தற்போது மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினருடன் முடிந்தளவு சேவையாற்றி வருகிறோம். நான் அம்பாறையைச் சேர்ந்தவர். எனது பணியினை உச்சக்கட்டமாக செய்து வருகிறேன். பாஷை ஒரு பிரச்சினையாகத் தெரியவில்லை. இப்போது பழகி விட்டேன். ஏழை எளிய மக்களுக்குச் சேவை செய்யக் கிடைத்தமை ஒரு பாக்கியமாகும்.

தினமும் சுமார் 200முதல் 250 வரையிலான நோயாளிகள் இங்கு வருகின்றனர். கிளினிக் நாட்களில் அதிகம். இப்பிரதேச நிலை கருதி எமது சுகாதார ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் சேவை செய்கின்றனர். இரத்தப் பரிசோதனை வசதி இம்மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

விரைவில் தரமுயர்த்தப்பட்டதும் மேலதிக டொக்டர், தாதிய உத்தியோகத்தர்கள் போன்ற ஆளணி கிடைக்கப்பெறும். அப்போது தற்போதையைவிட மிகவும் திருப்தியான சேவையை வழங்கமுடியும் என்றார்.



**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# ஜனநாயக உரிமைகளுக்காக நாம் என்றும் ஆஜராவோம்

'தேசிய மக்கள் சக்தியை தேர்தலை நோக்காகக் கொண்டு அமைக்கவில்லை. ஆனால் சந்தர்ப்பசூழ்நிலை காரணமாக ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பத்தொன்பது வருட காலமாக படிப்படியாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் குறைவடைந்து கொண்டு வருகின்றது. தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மக்கள் விடுதலை முன்னணி அடைந்த பின்னடைவு தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி எமக்கு வழங்கிய பேட்டியில் விளக்கம் அளித்தார்.

**கேள்வி: 19வது திருத்தத்துக்கு ஆதரவு தெரிவித்த மற்றைய கட்சி அமைதியாகவுள்ளது. சிலர் 19க்கு எதிராக உள்ள போதும், ம. வி. முன்னணி இன்னும் 19க்காக ஆஜராகுமா?**

**பதில்:** 19வது திருத்தத்துக்காக நாம் இன்றும் ஆஜராவோம். நாம் மாத்திரமல்ல 20வது திருத்தத்துக்கு கையை உயர்த்த இருப்பவர்களும் 19க்கு கையை தூக்கியவர்கள்தான். நாம் ஜனநாயகத்துக்காகவே 19க்கு கையை உயர்த்தினோம். நாம் என்றும் ஜனநாயக உரிமைக்காக ஆஜராவோம். சிலர் 17வது திருத்தத்தில் சுயாதீன ஆணைக் குழுவை அமைக்க கை உயர்த்தினார்கள். 18வது திருத்தத்தால் சர்வாதிகாரத்துக்காக கையை உயர்த்தினார்கள். 19க்கு மீண்டும் அவர்களே கையை உயர்த்தினார்கள். 19க்கு கையை உயர்த்தியவர்களே மீண்டும் 20க்கும் கையை உயர்த்துவார்கள். பிரச்சினை என்னவென்றால் அவை எல்லாவற்றுக்கும் விருப்பம் தெரிவிக்கும் மக்கள் இருப்பதால் ஆகும்.

**கேள்வி: 19இன் ஊடாக ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்கள் எடுத்த சில முடிவுகள் காரணமாக பல குறைபாடுகளை காணக் கூடியதாக இருந்தது. அது பற்றி ம.வி.முன்னணிக்கு ஏதேனும் விமர்சனங்கள் இருக்கவில்லையா?**

**பதில்:** எமக்கு தெளிவான விமர்சனம் இருந்தது. முன்னைய ஆட்சியில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான கயிறிழுப்பு காரணமாக 19வது திருத்தம் விகாரமடைந்தது. உதாரணமாக கட்சி மாறும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுப்பினர் பதவியை நீக்க வேண்டுமென நாம் யோசனையை முன்வைத்தோம். ஆனால் இரு தரப்பாரின் ஒப்புதலின் பேரில் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. யோசனையை நாம் திருத்தமாக முன்வைத்த போது அதற்கு விஜேதாச ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவ்வேளையில் அவர்கள் இருவரும் இருபுறத்தில் இருந்தார்கள். இரு தரப்பாரும் அந்த யோசனையை நிராகரிக்க விருப்பம் தெரிவித்தார்கள்.

அதேபோல் நியமனங்கள் குறித்தும் எமக்கு விமர்சனங்கள் காணப்பட்டன. உதாரணமாக தேர்தல் ஆணைக்குழுவில் போதுமான அளவு பிரதிநிதிகள் இல்லையெனக் கூறினோம். மூன்று பேருக்கு பதிலாக ஐந்து பேர் நியமிக்கப்பட வேண்டும் எனக் கூறினோம். அது போன்று பல குறைகள் இருந்தன. எமது கடந்த கால பாராளுமன்ற ஹன்சார்ட் அறிக்கையை எடுத்துப் பார்த்தால் அதனைக் காண முடியும். ஆனால் 19க்கு உள்ளே நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் காரணிகள் அடங்கியிருந்தன.

**கேள்வி: பொது நிறுவனங்களுக்கான செயற்குழு சபை (கோப்) பற்றி பேசும் போது உங்கள் பெயர் அடிக்கடி குறிப்பிடப்படும். இம்முறை பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதற்கும் கோப் குழுவில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கும் உங்களுக்கு திட்டமொன்று இருந்திருக்குமல்லவா?**

**பதில்:** அத்திட்டம் பற்றி தற்போது பேசிப் பயனில்லை. அரசாங்கக் கட்சியே தலைவர் பதவியை வைத்திருக்குமானால், அதனை எதிர்க்கட்சிக்கு வழங்காவிட்டால், ஊடக அனுமதியை நிறுத்துமானால், தணிக்கை ஆணைக் குழுவை நீக்கி, தணிக்கை தலைவரை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கே கிடைக்கும் என்றால் நான் அங்கே இருந்தாலும் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படாது. அதனால் நிஜமாகாத கனவு பற்றி கதைப்பதில் அர்த்தமில்லை.



**கேள்வி: நாட்டின் மூன்றாவது சக்தியாக முன்னுக்கு வந்து கொண்டிருந்த உங்களது கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அனைத்து பாராளுமன்றத் தேர்தல்களினூடாக பின்னடைவை சந்தித்து வருகின்றது. அதற்குக் கட்சியின் தலைவர் உட்பட அரசியல் குழு பொறுப்புக் கூற வேண்டுமல்லவா?**

**பதில்:** இல்லை, ஒருபோதும் பொறுப்புக் கூறத் தேவையில்லை. நாம் தேர்தலில் எடுத்த அரசியல் நடவடிக்கைகளில் குறைகள் இருக்குமானால் அதுபற்றி வேறாக கலந்துரையாடலாம். நாம் தேர்தலில் உண்மையைக் கூறினோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைத்தால் என்ன நடக்குமென்று கூறினோம். நாம் அது பற்றி பேசாதிருந்தால் எம் மீது குற்றம் சுமத்தலாம்.

**கேள்வி: அரசியல் விமர்சனம் குறித்து கதைக்கும் போது நிச்சயமாக ஞாபகத்தில் வரும் பெயர் மக்கள் விடுதலை முன்னணியாகும். ஆனால் விமர்சனங்கள் தேர்தலில் முடிவை தீர்மானிக்கும் காரணியல்ல என்பது கடந்த தேர்தலில் உறுதி செய்யப்பட்டுள்ளதல்லவா?**

**பதில்:** நாம் விமர்சனம் செய்யும் போது மக்கள் 'அரசாங்கத்துக்கு ஏச வேண்டாம்' என்று கூறினார்கள். நம் முன்வைத்தது சரியா தவறா என்பதை

## ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி

விட மக்களுக்கு ராஜபக்ஷக்களை ஏசுகிறோம் என்றே தோன்றியது. அதுதான் பிரச்சினையாகும். பொருட்களை விநியோகிக்க முடியுமென்றால், அதிகளவு பணத்தை விநியோகிக்க முடியுமென்றால் ஏமாற்ற முடியுமென்றால் வாக்குகள் கிடைக்கும்.

**கேள்வி: தேசிய உற்பத்திப் பொருளாதாரத்தை முன்னேற்ற அரசு முயற்சிப்பதாகத் தோன்றுகின்றது. இந்த தொனிப்பொருள் மக்கள் விடுதலை முன்னணி அநேக காலமாக கூறி வந்த ஒன்றாகும். இந்தத் திட்டம் பற்றி உங்களது கருத்தென்ன?**

**பதில்:** அது நல்லது. அமைச்சர்கள் மேற்கொள்வார்களா என எனக்குத் தெரியாது. அமைச்சுக்கான விடயங்களை பிரித்துள்ள விதம் நன்று. மக்களுக்கு புரியக் கூடிய வகையில் விடயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

**கேள்வி: 'தேசிய மக்கள் சக்தி' எனப் பாரிய அரசியல் திட்டமொன்றை உருவாக்கியதாக நீங்கள் கூறினாலும் இறுதியில் ஆராயும் போது மக்கள் விடுதலை முன்னணியின் அடிப்படையான வாக்குகளே கிடைத்தன. இதிலிருந்து உங்களது திட்டம் தோல்வியானதென்றா தெரிகிறது? அல்லது ம.வி.மு வாக்குகளில் சரிவு ஏற்பட்டுள்ளதா?**

**பதில்:** தேசிய மக்கள் சக்தியை தேர்தலை நோக்காகக் கொண்டு அமைக்கவில்லை. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தேசிய மக்கள் சக்தி விரிவான அரசியல் நோக்கங்களைக் கொண்டது.

மஞ்சுளா சமரசேகர...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# மலையக மக்களின் நலன்களுக்காக வெற்றிகரமான தீர்மானங்களை மேற்கொண்டவர் அமரர் ஆறுமுகன்



## பாராளுமன்றத்தில் அனுதாபப் பிரேரணை மீது ஹக்கீம் உரை

'மலையக மக்களின் அபிலாசைகள் பிரிவினைவாதமாக புரிந்து கொள்ளப்படக் கூடாது' என்பதில் அவதானமாக இருந்தவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மறைந்த ஆறுமுகன் தொண்டமான் தொடர்பான அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றிய ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அமரர் ஆறுமுகன் தொண்டமான் மீதான அனுதாபப் பிரேரணையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கலந்து கொண்டு அவர் பற்றி உரையாற்றுகின்ற போது, பிரதானமாக இந்திய வம்சாவளி மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி எங்களை விட்டுப் பிரிந்து சென்றுள்ள யுகபுருசர் ஒருவருக்கு இங்கு அனுதாபம் தெரிவிக்கின்றேன்.

இந்த நாட்டின் ஓர் அங்கமான மலையக தோட்டத் தொழிலாளர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அமரர் ஆறுமுகன் தொண்டமானும் நானும் 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே சந்தர்ப்பத்தில்தான் இந்தப் பாராளுமன்றத்தில் பிரவேசித்தோம். அதிலிருந்து இதுவரை நாங்கள் இடையறாது தொடர்ச்சியாக இந்த சபையில் சிறந்த முறையில் பணியாற்றியிருக்கின்றோம். அவர் ஒரு சிறந்த அரசியல் ஞானியாகக் காணப்பட்டார். அவரின் அரசியல் தீர்மானங்கள் மூலம் பலரை ஈர்த்திருந்தார். அவரது அபார திறமைகளை நான் நெடுகிலும் அவதானித்து வந்திருக்கின்றேன். அவரது பாட்டனார் சௌமியமூர்த்தி தொண்டமான் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதில் ஒரு தலைசிறந்த கொள்கை வகுப்பாளராகவும் செயல்வீரராகவும் திகழ்ந்திருக்கின்றார்.

மறைந்த ஆறுமுகம் தொண்டமான் மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க அனைத்து அரசாங்கங்களுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளார். அவரை எதிர்க்கட்சியில் பார்ப்பது மிகவும் கஷ்டமாகும். ஆனால், கடந்த நல்லாட்சியில் அவர் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தார். கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் பிரச்சினைகள் எழும் சந்தர்ப்பத்தில் மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதில் அவர் அயராது ஈடுபட்டிருந்தார். அவ்வாறான சந்தர்ப்பத்தில் மெதுவாக வேலை செய்யும் யுக்தியை அவர் காண்பித்தார். இறுதியில் அந்த முயற்சி அவர் எதிர்பார்த்ததை நிறைவேற்றி வைத்தது. தொழிற்சங்க அரசியலில் அவர் தமது முதிர்ச்சியை பலவாறாக வெளிப்படுத்தியிருந்தார். பேரம் பேசி விடயங்களை சாதித்துக் கொள்வதில் அவர் சிறந்து விளங்கினார். பெருந்தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், எம். எச்.எம். அஷ்ரப் ஆகியோரை அடுத்து அதே வழியில் நாங்கள் பின்தொடர்ந்தோம்.

1976ஆம் ஆண்டு தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி தோற்றம் பெற்ற போது மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் அதில் ஆர்வம் மிக்கவராக இருந்துள்ளார். ஆனால், மலையக மக்களின் அடையாளத்துவ அரசியலை பேணிப் பாதுகாத்ததில் நாட்டமுள்ளவராக மட்டுமல்லாது, பிரிவினைவாதத்திலிருந்து தனது மலையக மக்களை பாதுகாத்துக் கொள்வதிலும் அவர் கவனமாக நடந்திருக்கின்றார்.



எனது நண்பர் ஆறுமுகன் தொண்டமான் வடக்கிலும், தெற்கிலும் இருந்த தமிழ்க் கட்சிகள் ஓர் ஐக்கிய முன்னணியாக தோற்றம் பெற வேண்டும் என்பதிலும் கரிசனை கொண்டிருந்தார். தமது மக்களுக்கு எது தேவை என்பதில் அவர் குறியாக இருந்திருக்கின்றார். அதேவேளையில், தனது மக்களின் அபிலாஷைகள் பிரிவினைவாதமாக தவறாக புரிந்து கொள்ளப்படக் கூடாது என்பதிலும் அவர் கவனமாக இருந்து வந்தார்.

தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களை பாதிக்கக் கூடிய நெருக்கடிகள் தோன்றிய போதெல்லாம் அவற்றை அவர் உரிய முறையில் கையாண்டு வந்துள்ளார். மறைந்த நண்பர் ஆறுமுகன் தொண்டமான் தனது இளவயதில் எங்களை விட்டுப் பிரிந்து சென்றிருந்தாலும், அவரின் மறைவின் பின்னணியில் அவரது திறமைகளைப் பற்றி பின்னோக்கிப் பார்க்கின்ற போது மிகவும் துணிகரமாக தனது மக்களின் உய்வுக்காகவும், ஈடேற்றத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அவர் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் எங்கள் கண்முன் நிழலாடுகின்றன.

தோட்டத்துரைமார் சங்கங்களோடு கூட்டு ஒப்பந்தங்களை செய்துகொண்ட போதிலும் சரி, ஆட்சி தலைவர்களோடு தமது அமைச்சுப் பொறுப்புக்கள் சம்பந்தமான விவகாரங்களில் வாதிட்ட போதிலும் சரி, ஆட்சியாளர்கள் அவரது பூர்வீக இல்லமான வெவண்டன் தோட்டத்தில் மக்களுக்குப் பகிர வேண்டிய பொருட்களை ஒழித்து வைத்திருக்கிறார் எனக்கூறி, குற்றப் புலனாய்வுப் பிரிவினரை அனுப்பிச் சோதனைகளை மேற்கொண்ட போதிலும் சரி, அவருக்கு எதிராக இம்சிக்கின்ற நோக்கில் அரசியல் ரீதியாக எந்தவிதமாக நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் அவை எவற்றிற்குமே அஞ்சாமல் தனது மக்கள் சார்பில் துணிகரமாக நின்று போராடக் கூடியவராக அவர் இருந்திருக்கின்றார்.

மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமானின் வழி நின்று பல சாதனைகளை புரிந்த இளந் தலைவரொருவரை நாங்கள் இழந்து விட்டோம் என்று பெரும் துயருறுகின்றோம்.

சௌமிய மூர்த்தி தொண்டமானுடைய சிலை முன்னாள் பாராளுமன்றம் மற்றும் தற்போதைய ஜனாதிபதி செயலக வளாகத்தில் இந்நாட்டின் பெருந் தேசியத் தலைவர்களான பொன்னம்பலம் இராமநாதன், டி.எஸ். சேனாநாயக்க, எஸ்.எபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க ஆகியோரின் சிலைகளுக்கு மத்தியில் அமையப்பபெற்றுள்ளமை தொண்டமான் சந்ததி என்பது இந்த நாட்டின் தேசிய வீரர்களின் பட்டியலில் அடையாளச் சின்னமாக அடங்கியிருப்பதை நினைவூட்டுகின்றன.

எனவே, அந்த நீண்ட பாரம்பரியத்தின் அடுத்த வாரிசாக அவரது அரசியல் இடைவெளியை நிரப்புவதற்கு முன்வந்துள்ள அன்னாரின் மகன் ஜீவன் தொண்டமானுக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு குறிப்பாக, அவரது பாரியார் இராஜலக்ஷ்மி தொண்டமான், சகோதரிகள் விஜயலக்ஷ்மி, கோதை நாச்சியார் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்கின்ற பரந்து விரிந்த குடும்பம் உட்பட அனைவருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களை இந்த உயர் சபையில் சமர்பித்துக் கொள்கின்றேன்.

# இந்தியாவில் கொரோனாவிலிருந்து குணமடைவோர் தொகை அதிகம்

உலகில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா இப்போது கொரோனவால் அதிகமாக பாதிக்கப்பட்ட இரண்டாவது நாடாக உள்ளது. நாடு முழுவதும் கொரோனாவின் பாதிப்பு அதிகமாக இருந்தாலும் கொரோனாவில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. உலகளவில் கொரோனாவில் இருந்து மீண்டவர்களின் வீதத்தில் இந்தியாதான் முதலிடத்தில் உள்ளது.

குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதைப் போலவே இறப்பு வீதமும் இந்தியாவில் குறைவாக இருக்கிறது.

இந்தியாவின் தொற்று எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. கடந்த 23 வாரங்களில், இந்தியா தினமும் புதிய உச்சத்தை பதிவு செய்து வருகிறது. இதில் ஒரு விடயம் என்னவென்றால், தினசரி 90,000 புதிய தொற்றுகளை தொட்டு வரும் போது இந்தியாவின் குணமடையும் வீதமும் உயர்கிறது.

இந்தியாவின் தொற்றுநோய் கையாளுதல் அமெரிக்காவை விட வித்தியாசமாக உள்ளது, ஆனால் இந்தியாவை விட அதிக மீட்பு வீதம் கொண்ட நாடுகள் உள்ளன. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், டெல்லியின் மீட்பு வீதம் மிக உயர்ந்தது, சுமார் 90%. இத்தகைய நேர்மறையான மீட்பு வீதத்திற்கான ஒரு காரணம், நகரத்தில் சிறப்பாக நிர்வகிக்கப்படும் சுகாதார அமைப்பு என்று கூறப்படுகிறது. இலேசான மற்றும் மிதமான அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகளுக்கு வீட்டிலேயே சிகிச்சையளிக்க அனுமதிக்கும் வீட்டு தனிமைப்படுத்தும் முறை, மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடுமையான தொற்று நிகழ்வுகளுக்குச் செல்ல உதவியது. இது 'டெல்லி மொடலின்' அடிப்படையாக அமைந்தது, விரைவில் மற்ற மாநிலங்களிலும் காணப்பட்டது.

இந்தியாவில் மற்றொரு கோட்பாடு உள்ளது. கடந்த மாதங்களில், இந்தியாவில் நோயாளிகளை வல்லுநர்கள் பகுப்பாய்வு செய்துள்ள நிலையில், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் ஏராளமான நோய்த்தொற்றுகள் இலேசானவை மற்றும் மிதமானவை என்று ஊகிக்கப்படுகிறது, இதன் பொருள் கடினமான நிலைகளுடன் ஒப்பிடும்போது இந்த நிலையில் உடனடியாக நோயிலிருந்து மீள்வது எளிதாகவும் விரைவாகவும் இருக்கும்.

இந்தியாவில் 50% க்கும் அதிகமான மக்கள் ஆரோக்கியமான வயது வரம்பிற்குள் வருவதைக் கருத்தில் கொண்டு, மீட்பு மற்றும் குணப்படுத்துவதற்கான



## காரணம் என்ன?

முரண்பாடுகள் இயற்கையாகவே உயர்ந்தவை. உண்மையில் இந்தியாவுக்கு ஒரு விளிம்பைக் கொடுக்கும் ஒரே விஷயம் குறைந்த இறப்பு வீதமே தவிர மீட்பு விகிதம் அல்ல.

இந்தியாவில் மக்கள்தொகை ரீதியாக வேறுபட்ட வரைபடம் உள்ளது. பல நாடுகளைப் போலல்லாமல், தொற்றுநோய் நாட்டில் இரண்டு மடங்கு வேகமாக பரவுகிறது. லொக்டவுன் போடப்பட்டவுடன் நகர்ப்புறங்களில் பரவல் அதிகரிப்பதைக் காண முடிந்தது. இப்போது, சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களிடையே பரவல் அதிகரித்து வருவதைக் காண முடிகிறது, அதாவது இது மிகவும் ஆபத்தான முறையில் பரவுகிறது. இது சிறிது காலத்திற்கு முன்பு நிபுணர்கள் பரிந்துரைத்ததற்கான ஒரு குறிகாட்டியாகும். இந்தியாவில் வெவ்வேறு நகரங்கள் வேறு நேரத்தில் உச்சத்தை எட்டும், இது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

இந்தியாவில் சுகாதார அமைப்பு இன்னும் சிறப்பாக இல்லை, குறிப்பாக சிறிய நகரங்களில். எனவே, தொற்று நோயை ஒரு சிறந்த வழியில் கட்டுப்படுத்தாவிட்டால், அடிமட்ட மட்டத்தில், அதிக குணமடையும் போக்கை மாற்றியமைப்பதை காணலாம். பயனற்ற மேலாண்மை மற்றும் அதிகப்படியான பரவல் ஆகியவை குணமடைவதை கடினமாக்கும். எனவே இப்போது மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. இப்போதே, வைரஸின் நேர்மறை வீதத்தைக் கட்டுப்படுத்துவது, பெருக்கப்படுவதைத் தடுப்பது, பயனுள்ள தனிமைப்படுத்தும் உத்திகளைக் கொண்டிருப்பது மற்றும் மிக முக்கியமாக, சமூக தொலைதூரத்தை உறுதி செய்வது ஒரு பயனுள்ள முறையில் நடைமுறையில் உள்ளது.

## 33,000 கி. மஞ்சள், 3,000 கி.உளுந்து...

மாளிகாவத்தை, வெல்லம்பிட்டி, நாஹறென்பிட்டிய, கொட்டாஞ்சேனை, அக்மீமன, மல்வான, கதிரான மற்றும் கொழும்பு 12ஐ சேர்ந்த சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருவதுடன், சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யவும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

## சஜித் அணியுடன்...

பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ருவான் விஜயவர்த்தனவுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை பரந்துபட்ட கூட்டணியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ருவான் விஜயவர்த்தன பிரதிதலைவர் மாத்திரமே என்பதால் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் கட்சியின் தலைவரான பின்னரே உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மாகாணசபை தேர்தலின்போதுஇணைந்து செயற்படமுடியுமென்றும் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## த.ம.பே இணைத்தலைமையிலிருந்து...

தற்போது பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளவரை இந்த இணைத் தலைவர் பதவியை தொடர்ந்தும் வகித்து வந்த நிலையிலேயே தற்போது திடீரென அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

தமிழர் தரப்புக்கள் ஒருமித்து பலமான தரப்புகளாகச் செயற்பட வேண்டிய சூழ் நிலையில் பலரையும் இணைத்து கட்சி சாராமல் பலமான அமைப்பாக செயற்படும் நோக்கிலேயே இணைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மாவட்ட வீட்டுத்திட்ட...

மேற்கொண்டு நிலமைகள் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளார்.

அவர்களுக்கு நானும் யாழ். மாவட்டத்தின் வீடமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பில் விளக்கம் தெரிவித்திருந்தேன்.

அந்த விடயம் தொடர்பில் அதிகூடிய கரிசனை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த உறுதியளித்தார்.

அது மட்டுமன்றி வீடமைப்பு தொடர்பான அமைச்சராக இருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வடபகுதி மக்களின் வீட்டுத்திட்ட பிரச்சினை தொடர்பில் அதி கூடிய கவனம் செலுத்தியுள்ளார்.

எமது இந்த புதிய அரசாங்கம் மூலம் விரைவில் காணி அற்றவர்களுக்கான காணி கொள்வனவு, வீடுகள் இல்லாமல் தவிப்போருக்கான வீட்டுத்திட்டங்களை இனங்கண்டு வழங்கல், நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களுக்கு சொந்த வீடுகள் வழங்கல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்போம்.

## சமூக ஊடகங்களை பயன்படுத்தி...

டிஜிட்டல் லொத்தர் சீட்டிழுப்பு திட்டங்கள், ஒன்லைன் பரிசுகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் என்ற போர்வையில் இவர்கள் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவ்வாறான மோசடி தொடர்பில் இதுவரை 101 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் இது போன்ற மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும், அந்நியர்களுக்கு தமது தனிப்பட்ட தரவுகளை வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸார் வலியுறுத்திக் கேட்டுள்ளனர்.

## 22ம் திகதி முதலாம் வாசிப்பு... (03ஆம் பக்கத் தொடர்)

ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டு அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு 03 வார காலம் வழங்கப்படும் என்பதுடன், 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் ஜனாதிபதி, சபாநாயகர் ஆகியோருக்கு அறிவிக்கப்படும்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்ட மூலத்திலுள்ள சில சரத்துகளுக்கு சர்வஜன வாக்கெடுப்புடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை என தீர்ப்பளிக்கப்பட்டிருந்த தருணத்தில் சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிகோலும் விடயங்களை நீக்கிவிட்டு, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றுவதற்கு அப்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

உயர் நீதிமன்றத்தின் சட்டவிளக்கம் வெளிவந்த பின்னர் அதாவது மூன்றுவாரங்களுக்கு பின்னர் இரண்டாம் வாசிப்புக்கென சட்டமூலம் சபையில் முன்வைக்கப்படும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற பிரதி பொதுச் செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அப்துர் ரஹ்மான்... (03 ஆம் பக்கத் தொடர்)

பல நாடுகளுக்கு நேரடி விஜயம் செய்து பாரிய அளவில் நிதி உதவி செய்துள்ளார்.

இலங்கையில் உள்ள பல அரபுக் கலாசாலைகளுக்கும் இவர் பாரிய உதவிகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் மறைவிற்காக சீனன் கோட்டைப் பகுதியில் உள்ள பள்ளிவாசல்கள், ஸாவியாக்களில் நேற்று ஜும்ஆத் தொழுகையின் பின் மறைவான (காயிபான) ஜனாஸா தொழுகை நடாத்தப்பட்டு துஆப் பிரார்த்தனையும் செய்யப்பட்டது.

சீனன்கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட வளர்ச்சியின் இவர் பாரிய பங்களிப்புச் செய்துள்ளார்.

## எவராக இருப்பினும்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிலம் கொள்ளையடிக்கப்படுவதுத் தொடர்பில் கண்டறியவே இந்த விசேட பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதுடன், அரசு நிறுவனங்களில் முறைகேடு செய்யும் எவராக இருந்தாலும் அவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## 497 ஜெலிக்நைட் குச்சி... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்கொண்டுள்ளதுடன் கந்தளாய் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவும் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

## சந்தேக நபர்கள் ஏழு...

எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதவான் ஜயருவன் திசாநாயக்க நேற்று உத்தரவிட்டார்.

பலாங்கொடை கல்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த சந்தேக நபர்களான இவர்கள் 07 பேரும் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இவ்வாறு கட்டளையிட்டார். இச் சந்தேக நபர்கள் 05 பேரும் அடைக்கலம் கொடுத்த தந்தையும் மகனும் நேற்று முன்தினம் கல்தோட்டை பொலிஸ் பிரதேசத்தை சேர்ந்த பெல்லன்வில கூரகல பிரதேசங்களில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உளுந்து இறக்குமதிக்கான தடையை...

இதையடுத்து, உளுந்து மீதான தடையை மறுபரிசீலனை செய்வதற்கு கவனம் செலுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு பிரதமர் நேற்றுக் காலை ஆலோசனை வழங்கியுள்ளார்.

## வெளிநாடுகளிலிருந்து மேலும்...

தொடர்ச்சியாக கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர் மீண்டும் நாடு திரும்பி வருகின்றனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு முதலீடுகளை...

தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடன் சேவை கணக்கு 90% இற்கும் அதிகமாகும் எனவும் தெரிவித்தார்.




உடப்பு ஸ்ரீவீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கல் அண்மையில் இடம்பெற்றது. கச்சான் காற்று முடிவுற்று வாடைக் காற்றை வரவேற்கும் முகமாக உடப்பு கடற்றொழிலாளர்களால் இந்தப் பொங்கல் நிகழ்த்தப்படுகின்றது. பின்னர் மக்கள் தமது கடற்றொழிலை வழமை போன்று ஆரம்பிப்பார்கள்.

(படம்: உடப்பு குறூப் நிருபர்)

# தமிழ் கூட்டமைப்பு கடந்த அரசுக்கு முண்டுகொடுக்கவில்லை

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த அரசாங்கத்துக்கு முண்டுகொடுக்கவில்லையென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இந்நிலையில், கூட்டமைப்பு தமிழரின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இராஜதந்திர முயற்சியையே மேற்கொண்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தேசியத் தலைவருடையது. அந்த உருவாக்கத்தில்தான் நாம் எல்லோரும் பயணித்தோம். அந்தவகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராகவே உள்ளது.

இவ்வாறு கூட்டமைப்பின் ஜோசப் பரராஜசிங்கம், சிவநேசன், ரவிராஜ் போன்ற உறுப்பினர்கள் உயிரைக் கொடுத்த வரலாறு உள்ளது. இவ்வாறு பல நெருக்குதல் சூழ்நிலைகளிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருந்தது. ஆனால், இந்த வரலாறுகளை மக்களுக்கு நாம் சொல்வதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆண்டுதோறும் ஆறு... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆண்டாகும் போது பசுமை மற்றும் புதுபிக்கத்தக்க சக்தியின் மூலம் நாட்டுக்குத் தேவையான 70 சதவீதமான மின்சாரத்தை பெற்றுக்கொள்வதாகும். தற்போது டீசல் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் 32 சதவீதமான மின்சாரத்தை 05 சதவீதமாக குறைக்க வேண்டும். மின்சார உற்பத்திக்கான தடைகள் நீக்கப்பட வேண்டும்.

புதுபிக்கத்தக்க சக்தியின் மூலம் 900 மெகா வோல்ட் மாத்திரமே தற்போது பெற்றுக்கொள்ளப்படுகிறது. 2023ஆம் ஆண்டாகும் போது இதனை இரட்டிப்பாக்குவதே அரசாங்கத்தின் இலக்காகும். அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

## கடல்வழியாக... (03 ஆம் பக்கத் தொடர்)

பொலிஸார் தெரிவித்தனர். கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இப்பகுதியில் மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பின் போதே இயந்திரப்படகு ஒன்றிலிருந்து மஞ்சள்கட்டி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மஞ்சள் மூடைகள் பறிமுதல் செய்யப்பட்ட இயந்திரப்படகு சிலாபம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்குச் சொந்தமானது என்பதுடன், படகிலிருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர்களையும், இயந்திரப்படகின் உரிமையாளரையும் கைது செய்வதற்கு பொலிஸாருடன் இணைந்து கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள 1,000 கிலோ மஞ்சளின் பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## உலக சந்தையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஏறி தேங்காய் பறிக்கும் தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளதுடன் தேங்காய் பறிக்கும் தொழிலாளர்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தேங்காயின் விலை எவ்வளவு உயர்ந்திருந்தாலும், தேங்காயை இறக்குமதி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது. அடுத்த சில நாட்களில் புறநகரில் வசிக்கும் மக்களுக்கு சலுகை விலையில் தேங்காய் வழங்குவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்படும்.

வாரக்காபொல பகுதியில் நபர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட இயந்திரத்தின் உதவியுடனே இராஜாங்க அமைச்சர் தென்னை மரத்தில் ஏறியிருந்தார்.

இந்த இயந்திரம் அடுத்த சில மாதங்களில் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படும். இந்த இயந்திரத்தின் உதவியுடன் தேங்காய் மரத்துக்கு மிக வேகமாக ஏறலாம். மேலும் இந்த இயந்திரத்தை பனை மற்றும் கித்துல் மரங்களில் ஏறவும் பயன்படுத்த முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## அரச காணிகளில் கருங்கல்... (03 ஆம் பக்கத் தொடர்)

சுற்றுச்சூழல் மற்றும் தொல்பொருள் பரிந்துரையை புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தில் மாத்திரம் பெறவும், ஒரு பாறை பிரித்தெடுக்கும் திட்டத்திற்கு ஒரு முறை மட்டுமே தொல்பொருள் பரிந்துரைகளை வழங்கவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

சூரியவெவ பிரதேசத்தில் குகைகள் மற்றும் குளங்களை கொண்ட நிலங்களில் கடந்த காலத்தில் கருங்கல் அகழ்விற்கான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அங்குள்ள பாரிய கற்பாறைகள் இரண்டில் ஒரு கற்பாறையில் இதுவரை கருங்கல் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இவை தொடர்பில் அவதானம் செலுத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், அந்த சந்தர்ப்பத்திலேயே தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்கவை அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு அறிவுறுத்தினார்.

## நல்லாட்சி அரசு,... (03 ஆம் பக்கத் தொடர்)

பெற்றுக் கொடுக்கப்படும். நாட்டில் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதிலும் தாமதம் ஏற்பட்டது.

மருந்து உற்பத்திக்கான சட்ட திட்டங்கள் நடைமுறையில் காணப்பட்டாலும் காலத்திற்குப் பொருத்தமான வகையில் தேவைக்கு ஏற்ப அந்த சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படும்.

மருந்து உற்பத்தி தொடர்பில் ஜனாதிபதியினால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரைக்கமைய நாட்டின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும். அதேவேளை நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயங்கினர். அதற்கு காரணம் முதலீட்டாளர்களுக்கு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு பதிலாக அவர்களிடமிருந்து கமிஷன் பெற்றுக் கொள்வதிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தினர்.

அதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முதலீடுகள் பெரும் பின்னடைவைக் கண்டன.

தற்போதைய அரசாங்கம் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தையும் உற்பத்தி செய்வதோடு அதற்கான சலுகைகளையும் பெற்றுக்கொடுக்கும். இத்தகைய திட்டங்கள் மூலம் அரசாங்கத்துக்கு வருமானமும் பாரிய வேலைவாய்ப்புகளும் கிடைக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன உட்பட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களும் கலந்துகொண்டனர். (ஸ)

## சமூகத்தில் இனங்காணப்படாவிடினும்...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டில் சமூகத்தினுள் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்படாவிட்டாலும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் பெரும்பாலானவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனங்காணப்படுகிறது.

எனினும் சமூகத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்படாவிட்டாலும் வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். உற்சவங்கள் நடத்தப்படும்போதும் பொறுப்பற்று செயற்படுவதாக எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. தனிமைப்படுத்தல் நிலையங்களாக உள்ள ஹோட்டல்களிலுள்ள ஊழியர்களும் சுகாதார பாதுகாப்புடன் பொறுப்பாக செயற்பட வேண்டும் என்று கோருகின்றோம் என்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது கொரோனா கட்டுப்படுத்தலில் இலங்கை சிறந்த மட்டத்திலுள்ளது. மக்களின் ஒத்துழைப்பினாலேயே இதனை எம்மால் பேண முடிந்தது.

இந்த நிலைமையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள மக்கள் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த காலங்களில் சமூகத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டார்கள் என்பதை மறக்காமல் அடிப்படை சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றார்.

## இன்சுலின் உட்பட 33 ஊசி மருந்துகளை...

அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்கள் பேராசிரியர் சன்ன ஜயசுமன, சானக்க உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் ரதெல்ல ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இரண்டு வருடங்களில் இந்த தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் சர்வதேச தரத்திலான மருந்துகள் என தரச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் ஜப்பானின் முறைமை தரநிர்ணயத்திற்காக உபயோகப்படுத்தப்படவுள்ளது.

உள்ளூரில் இந்த ஊசி மருந்து உற்பத்தி செய்யப்படும் நிலையில் இந்த ஊசிமருந்து கொள்வனவுக்காக வருடாந்தம் அரசாங்கம் செலவிடும் தொகையில்10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை மீதப்படுத்த முடியுமென அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது.

இறக்குமதி செய்யப்படும் சில ஊசி மருந்துகள் உள்ளூர் மருந்தகங்களில் 1,200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன் இலங்கையில் உற்பத்தியாகும் போது 450 ரூபாவிற்கு அதனை வழங்க முடியும் என மேற்படி கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது. அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைக் கிணங்க மருந்து உற்பத்தியில் நாடு தன்னிறைவு காணவும் குறைந்த விலையில் மக்களுக்கு தரமான மருந்துகளை பெற்றுக்கொடுப்பதுமே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் மேற்படி கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது. (ஸ)

## யாழ். பல்கலை இணையவழி...

சலுகைகள் உயர் பட்டப்படிப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா தெரிவித்தார்.

இணையவழியில் மாணவர்கள் பாலியல் ரீதியிலான பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டதாக தென்னிலங்கை ஊடகங்களில் வெளியாகியிருந்த செய்தி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீ சற்குணராஜா தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பல்கலைக்கழக பீடாதிபதிகள், மாணவ சிரேஷ்ட ஆலோசகர்கள், பேரவை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள் பலர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

அண்மையில் நடைபெற்ற பகிடிவதை தொடர்பில் உத்தியோகப்பற்ற முறையில் வெளியாகிய தகவலின் அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் 10 மணி நேரம் மேற்கொண்ட விசாரணைகளின்படி முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இப்பகிடிவதை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய முதலாம் ஆண்டு மாணவர்கள் இருவரும் விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் இனங்காணப்பட்ட மாணவர்கள் இவ்விபரங்கள் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று அறிவித்தது.

பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பகிடிவதை தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த மாணவர்கள் மீதான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக தெரிவித்தார்.

இவ்வாறு பகிடிவதை செய்தவர்கள் 'உன்னுடைய அக்கா இராணுவத்தில் இருக்கின்றா தானே?" எனக் கேட்டு, இம்சைப்படுத்தியுள்ளனர். இங்கு அரசியல் பழிவாங்கல்களும் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை மாணவர்களின் இம்சைப்படுத்தல்கள் சுய வெளிப்பாடுகள் அல்ல. இது அரசியல் பழிவாங்கல்களாக உள்ளன.


எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள், முகாமைத்துவ பீட பீடாதிபதி மற்றும் மாணவ ஆலோசகர்கள், சம்பவம் தொடர்பாக அறிக்கை தர வேண்டும். அவர்களுக்கு 07 நாட்கள் வழங்கப்படும், அந்த 07 நாட்களில் பதில் தர வேண்டும்.07 நாட்களில் பதில் தராவிடின், பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அத்துடன், 04 ஆம் வருட வகுப்புக்கள் தடை விதிக்கப்படும், கௌரவப்பட்டங்கள் வழங்கப்படமாட்டாது, அத்துடன், ஆகக்குறைந்த ஒழுக்காற்று அபராதம் விதிக்கப்படும். சைபர் குற்றத்தின் பிரகாரம், அந்த மாணவர் என்ன கேட்டனர் என்பதை பொறுத்து நடவடிக்கைகள் வலுப்பெறும்,

அத்துடன், சிரேஸ்ட மாணவர்களுக்கு உதவியதாக தெரிவிக்கப்படும், புதுமுக மாணவர்களும், பல்கலைக்கழக விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சைபர் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதன் பின்னர், பொலிஸார் அந்த மாணவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க பல்கலைக்கழக நிர்வாகம், உரிய ஒத்துழைப்புக்களை வழங்கும் என்றும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவருக்கு ஹோட்டல் குடிநீரிலேயே விசம்



ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவல்னி தங்கியிருந்த ஹோட்டல் அறையில் அருந்திய நீரில் நச்சு கலக்கப்பட்டிருப்பதாக அவரது உதவியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளர்.

நவல்னி விமானப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் செர்பியாவின் டோம்ஸ்க் நகரில் தங்கியிருந்த ஹோட்டலிலேயே அவர் மீது நச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அவரது அறையில் இருந்த தண்ணீர் போத்தலில் நோவிசோக் நச்சுப் பொருள் படிந்திருந்ததாக அவரது உதவியாளர்கள் இன்ஸ்டாகிராம் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ஆட்சிக்கு எதிராக தீவிரமாகப் போராடி வருபவர்களில் முக்கிய தலைவரான நவல்னி அதற்காக பல முறை சிறை சென்றுள்ளார்.

ஏற்கனவே அரசு ஆதரவாளர்கள் அவரை கிருமிநாசினி மூலம் கடந்த 2017ஆம் ஆண்டு தாக்கியதில் அவரது ஒரு கண் பாதிக்கப்பட்டது.

தற்போது ஜெர்மனியில் சிகிச்சை பெற்று வரும் நவல்னி மீண்டும் தாய் நாடு திரும்பப்போவதாக அறிவித்துள்ளார்.

# கொவிட்–19: உலகப் பொருளாதார மீட்சிக்கு ஐந்து ஆண்டுகள் தேவை




கொவிட்19 வைரஸ் பரவலிலிருந்து உலகப் பொருளாதாரம் மீண்டு வர எப்படியும் ஐந்து ஆண்டுகளாவது தேவைப்படும் என்று உலக வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணர் கார்மென் ரெய்ன்ஹார்ட் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளில் நடப்பிலிருக்கும் முடக்கநிலை தளர்த்தப்பட்டவுடன் பொருளாதாரம் உடனே மேம்பட ஆரம்பிக்கும் என்றார் அவர். ஆனால், பொருளாதார சூழல் முழுமையாக மீண்டு வர ஐந்தாண்டுகளாகும் என்று ரெய்ன்ஹார்ட் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை ஒருசில நாடுகளில் தொடர்ந்து நீடிக்கும் என்ற ரெய்ன்ஹார்ட், வசதி குறைந்தவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவர் என்றார். அதன் விளைவாக சமுதாய ஏற்றத் தாழ்வு அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, இருபது ஆண்டுகளில் முதன்முறையாக சர்வதேச அளவில் வறுமை அதிகரிக்கும் என்று ரெய்ன்ஹார்ட் சுட்டிக்காட்டினார்.

# வைரஸால் பாதிக்கப்படும் ஏழு பேரில் ஒருவர் சுகாதார துறை ஊழியர்



கொவிட்19 நோயால் பாதிக்கப்படுவதாகப் பதிவு செய்யப்படுவோரில் ஏழு பேரில் ஒருவர் சுகாதாரத் துறை ஊழியர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த எண்ணிக்கை சில நாடுகளில் மூன்று பேருக்கு ஒன்று என காணப்படுகிறது.

வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னணி ஊழியர்களுக்கு, பாதுகாப்பு அங்கிகள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியது.

அதன்மூலம் முன்னணி ஊழியர்களிடம் இருந்து மற்ற நோயாளிகளுக்கும், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் வைரஸ் பரவாமல் இருக்கும் என்று அமைப்பு கூறியது.

உலக அளவில் பதிவான நோய்த் தொற்றுச் சம்பவங்களில் சராசரியாக 14 வீதத்தினர் சுகதாரத் துறை ஊழியர்களாவர். சில நாடுகளில் அது 35 வீதமாக உள்ளது.

தற்போதைய நிலவரப்படி உலக அளவில் கொவிட்19 நோயால் சுமார் 30 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 938,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாதியர் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

# அமெரிக்க பிரதிநிதியின் தாய்வான் விஜயத்தால் பிராந்தியத்தில் பதற்றம்

## சீனா இராணுவ ஒத்திகை அறிவிப்பு



அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் தாய்வானுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் நிலையில் இறைமையை பாதுகாப்பதற்காக தாய்வான் நீரிணைக்கு அருகில் இராணுவ ஒத்திகையை நடத்துவதாக சீனா அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான முறுகல் அதிகரித்திருக்கும் சூழலில் அமெரிக்கா, தாய்வான் மீது ஆதரவை வெளியிட்டு வருகிறது. இந்த பதற்றத்திற்கு மத்தியிலேயே சீனா இராணுவ ஒத்திகையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுயாட்சி இடம்பெறும் தாய்வான் தமது பிரிந்து சென்ற மாகாணம் என்று சீனா கூறி வருகிறது. தேவையெனில் படை பலத்தை பயன்படுத்தியும் அதனை சீனாவுடன் இணைப்பது குறித்தும் சீனா கூறி வருகிறது.

இந்நிலையில் கடந்த 40 ஆண்டுகளில் முதல் முறையாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் மட்ட அதிகாரியான கீத் கிரச் தாய்வானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சீன பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ரென் குவோகியாங் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், அமெரிக்கா மற்றும் தாய்வானின் "கூட்டணி அடிக்கடி தொந்தரவை ஏற்படுத்துகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க உயர் அதிகாரியின் விஜயம் பற்றி அவர் எந்த கருத்தும் வெளியிடவில்லை.

"சீனாவை கட்டுப்படுத்த தாய்வானை பயன்படுத்துவது" அல்லது எம்மை கட்டியெழுப்ப வெளிநாட்டவர்களை நம்புவது மாயை சிந்தனை என்றும் அவர் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார். "நெருப்புடன் விளையாடுபவர்களுக்கு தீ பற்றிக்கொள்ளும்" என்றும் அவர் எச்சரித்தார்.

தாய்வானின் தென்மேற்குக் கடல் பகுதியில் சீனா கடந்த வாரம் பெரும் இராணுவ ஒத்திகையை நடத்திய நிலையிலேயே இந்த புதிய ஒத்திகை பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தாய்வானின் மறைந்த தலைவர் டென்ங் லீ உய்யின் ஞாபகார்த்த நிகழ்வில் பங்கேற்பதற்காகவே அமெரிக்க மூத்த அதிகாரியான கிரச் தாய்வான் விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் நேற்று அந்நாட்டு ஜனாதிபதியையும் சந்தித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையே அண்மைய ஆண்டுகளாக முறுகல் நீடித்து வரும் நிலையில் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது. 2018 தொடக்கம் இரு நாடுகளும் வர்த்தகப் போர் ஒன்றில் ஈடுபட்டிருப்பதோடு, கொரோனா வரைஸ் தொற்று, தென் சீன கடல் உரிமை விவகாரம், உளவுக் குற்றச்சாட்டுகள் குறித்தும் இரு நாடுகளும் மோதல் போக்கை கடைப்பிடித்து வருகின்றன.

தாய்வானுடன் அமெரிக்கா உத்தியோகபூர் இராஜதந்திர உறவை பேணாதபோதும், 1979இன் தாய்வான் உறவுகள் சட்டத்தின் கீழ் அந்த நாட்டுக்கு ஆயுதங்களை விற்று வருகிறது.

கடந்த மாதம் அமெரிக்க அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் தாய்வான் ஜனாதிபதியை சந்தித்ததை அடுத்து சீனா கடும் கோபத்தை வெளியிட்டிருந்தது.

"அமெரிக்க மற்றும் சீன உறவை மேலும் மோசமாக்கும் தாய்வான் சுதந்திரம் பற்றி எந்த ஒரு தவறான சமிக்ஞையையும் வழங்க வேண்டாம் என்று அமெரிக்காவை நாம் வலியுறுத்துகிறோம்" என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், தென் சீன கடல்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் தாய்வான் நாட்டிற்கு மிகப்பெரிய அளவில் ஆயுத விற்பனை செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த ஆயுத விற்பனையில் ஏவுகணைகளும் உள்ளடக்கம் என தெரிய வந்துள்ளது.

இந்த விவகாரங்களால் தாய்வான் மற்றும் சீனா இடையே மோதல் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐரோப்பாவில் தீவிரமடையும் கொரோனா வைரஸ் தொற்று

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



ஐரோப்பாவில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதுபோக ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில், உத்தேச நோயாளிகளைத் தனிமைப்படுத்தும் நாட்கள் குறைக்கப்பட்டுவருவது குறித்தும் அந்த அமைப்பு கவலை தெரிவித்தது.

இந்த மாதம் ஐரோப்பாவில் அதிகரிக்க ஆரம்பித்துள்ள நோய்ப்பரவல் சம்பவங்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஓர் எச்சரிக்கை மணி என்று உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பணிப்பாளர் கூறினார்.

உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தல்படி நோய்த்தொற்று உள்ளவர்களிடம் தொடர்பில் இருந்தவர்கள் குறைந்து 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் பிரான்ஸில் அது 7 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. பிரிட்டனிலும் அயர்லந்திலும் அது இப்போது 10 நாட்களாக உள்ளது. இன்னும் சில நாடுகள் அதேபோன்று தனிமைப்படுத்தப்படும் நாட்களைக் குறைக்கத் திட்டமிடுகின்றன.

தனிமைப்படுத்தும் நாட்களைக் குறைத்தால், சர்வதேச பயணத்துக்கு அனுமதி வழங்குவது எளிதாகும் என்பது அவற்றின் நம்பிக்கை. தற்போதைய நிலவரப்படி ஐரோப்பாவில் கொவிட்19 நோயால் சுமார் 5 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 227,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது ஐரோப்பாவில் சராசரியாக நாளொன்றுக்கு 40,000 இல் இருந்து 50,000 பேர் வரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

வைரஸ் தொற்றுக்கான மருத்துவச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டதால் புதிதாக அடையாளம் காணப்படுவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

# இஸ்ரேலுடன் உறவுக்கு மேலும் 5 நாடுகள் தீவிர ஆலோசனை



ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பஹ்ரைனைத் தொடர்ந்து இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்த மேலும் ஐந்து நாடுகள் தீவிரமாக ஆலோசித்து வருவதாக வெள்ளை மாளிகை தலைமைப் பணியாளர் மார்க் மீடோஸ் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் டிரம்பின் ஜனாதிபதி பிரசாரத்திற்கான விஸ்கோன்சினை நோக்கி விமானத்தில் பயணிக்கும் போதே மீடோஸ் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். எனினும் ஐந்து நாடுகளின் விபரத்தை அவர் குறிப்பிடவில்லை.

எனினும் அவைகளில் மூன்று அந்தப் பிராந்தியத்தை சேர்ந்தவை என்று குறிப்பிட்ட அவர் அது பற்றி மேலதிகமாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பஹ்ரைன் உடன்படிக்கையை அடுத்து இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்த மேலும் பல நாடுகள் இணங்கி வருவதாக டிரம்ப் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற ஓமான், இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்த சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. சவூதி அரேபியாவும் உடன்படிக்கை ஒன்றுக்கு இணங்கும் என்று டிரம்ப் எதிர்வு கூறி இருந்தார்.

# சவூதியில் பண்டைய காலத்து கால் தடங்கள் கண்டுபிடிப்பு

சவூதி அரேபியாவில் 1.2 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய மனித மற்றும் விலங்குகளின் கால்தடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் வடமேற்கு பகுதியில் உள்ள தபூக் மாகாணத்தின் ஒரு பழங்கால ஏரியில் மனித மற்றும் விலங்குகளின் கால்தடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து அறிவிப்பை வெளியிட்ட சவூதி அரேபியா, அரேபிய தீபகற்பத்தில் பழமையான வசிப்பிடத்தின் முதல் அறிவியல் சான்றுகள் என இதனைக் குறிப்பிட்டுள்ளது.

புறநகர் பகுதியில் உள்ள இந்த வரண்ட ஏரியைச் சுற்றிலும் மனிதர்கள், யானைகள் மற்றும் மான்கள் போன்ற விலங்குகளின் கால்தடங்கள் கிடைத்துள்ளன. இதுவரை சுமார் 233 யானைகளின் புதைபடிவங்கள், ஏழு மனிதர்கள், 107 ஒட்டகங்கள் மற்றும் பிற விலங்குகளின் தடயங்களை அகழ்வாராய்ச்சிக் குழு கண்டறிந்துள்ளது.



தொல்ருபெள் ஆணையத்தின் தலைமை நிர்வாகி கலாநிதி ஜாசர் அல் ஹெர்பிஷ் கூறியதாவது: "மான், ஏழு மனிதர்கள், 107 ஒட்டகங்கள், 43 யானைகள் மற்றும் பிற விலங்கு தடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தத் தடயங்கள் விலங்குகள் கூட்டமாக நகர்ந்து கொண்டிருந்ததைக் குறிக்கின்றன" என்று தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் பாரம்பரியத்திற்கான சவூதி ஆணையம் இது இந்த ஆண்டின் மிக முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

# பங்களாதேஷில் முஹமது நபியை அவமதித்தவருக்கு 7 ஆண்டு சிறை

பேஸ்புக்கில் முஹமது நபியை அவமதித்ததாக முஸ்லிம் பெரும்பான்மை நாடான பங்களாதேஷில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் உத்தியோகபூர்வமாக ஒரு மதச்சார்பற்ற நாடாக இருந்தபோதும் இஸ்லாம் பற்றிய விமர்சனங்கள் சமூகத் தடைக்கு உரிய ஒன்றாக இருந்து வருகிறது. இது தொடர்பில் கடந்த காலங்களில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன.


இந்நிலையில் ஒரு காவல் அதிகாரியாக இருக்கும் ஜிபோன் கிறிஷ்னா ரோய் என்பவர் பேஸ்புக்கில் "முஹமது நபி பற்றி ஆபாசமான, அவதூறான மற்றும் ஏற்க முடியாத கருத்துகளை வெளியிட்டார்" என்று அரச வழங்கறிஞர் நஸ்ருல் இஸ்லாம் ஷஹிம் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சர்ச்சைக்குரிய இணைய தளம் தொடர்பான சட்டத்தின் கீழே இவருக்கு கடந்த புதன்கிழமை இந்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஆண்டு மற்றொரு ஹிந்து ஆடவர் ஒருவர் பேஸ்புக்கில் இட்ட பதிவை அடுத்து பெரும் ஆர்ப்பாட்டம் வெடித்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நால்வர் கொல்லப்பட்டு 50 பேர் வரை காயமடைந்தனர்.

வன்முறையைத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்ட அந்த ஆடவர் மீதான வழக்கு தொடர்ந்து விசாரணையில் உள்ளது.




ஹலோ ரெஸ்ட் தன்னார்வ நிறுவனத்தால் முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மிதிவெடி அகற்றும் செயற்பாடு தொடர்பாக அதன் அதிகாரியொருவர் மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்துவதை படத்தில் காணலாம்.

படம் புதுக்குடியிருப்பு நிருபர்

# வடக்குக்கு வரும் அமைச்சர்கள் முல்லைக்கும் வர வேண்டும்

***மாங்குளம் குறூப் நிருபர்***

வடக்கு மாகாணத்துக்கு வருகை தரும் அமைச்சர்கள் ஏ9 வீதியூடாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு மட்டும் சென்று விட்டு திரும்பாது மிகவும் பாதிப்படைந்த முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அண்மை நாட்களாக யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர்கள் வருகை தருகின்ற போது ஏ9 வீதி ஊடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு மட்டும் வருகை தந்து விட்டு செல்கின்ற அமைச்சர்கள் அங்குள்ள நிலைமைகளை வைத்து முடிவுகளை எடுக்காது மிகவும் பாதிக்கப்பட்ட இடமாகிய முல்லைத்தீவு, வவுனியா மன்னார் போன்ற இடங்களுக்கும் வர வேண்டும்.

ஏ 9 வீதியூடாக மட்டும் சென்று விட்டு ஒழுங்காக வீதிகள் செப்பனிடப்பட்டிருப்பதாகவும், அந்த வீதிகளில் சென்று விட்டு அங்கே சென்று யாழ் நகரத்திலும் கிளிநொச்சி நகரத்தில் சந்திப்புகளை நடத்தி விட்டுச் செல்லும் போது கிராம மட்டங்களில் உள்ள மக்களின் பிரச்சினைகள் தெரியாது.



மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் போன்ற மாவட்டங்களுக்கு வருகை தந்து மக்களுடன் சந்திக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளை தீர்க்க முன் வர வேண்டும். அண்மையில் விவசாய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

அவர் தமிழில் பேசக் கூடியவர். மலையக மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கின்றவர். அதே போன்று எங்களுடைய மக்களுடைய பிரச்சினைகளையும் நேரில் வருகை தந்து மக்களிடம் கலந்துரையாடி விவசாயிகளின் குறைபாடுகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# கண்டாவளை பிரதேச செயலகத்தில் இணையவழி சேவை ஆரம்பம்

***பரந்தன் குறூப் நிருபர்***

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தினால் மக்களுக்கான வினைத்திறன்மிக்க துரித சேவைகளை வழங்கும் நோக்கில் இணைய வழி சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இனைய வழி குடும்ப பங்கீட்டு அட்டை அறிமுக விழா மற்றும் மர நடுகை என்பன பிரதேச செயலக வளாகத்தில் நேற்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. தற்போது மக்களுக்கு இலகுவான சேவையை வழங்கக் கூடிய வகையில் இணைய வழியிலான பங்கீட்டு அட்டை அறிமுக விழா கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் தலைமையில் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், 57வது படைப்பிரிவின் இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டி.ஜீ. எஸ். செனரத்யாப்பா உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.




# காணி ஆவணம் இல்லாதவர் விரைவாக விண்ணப்பியுங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான்

***ஓமந்தை விசேட நிருபர்***

நீண்ட காலமாக பயன்பாட்டில் உள்ள போதிலும் அக் காணிக்கான ஆவணம் இல்லாதவர்கள் விரைவாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தமது பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்குமாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் முல்லைத்தீவுக்கான ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

எமது பகுதிகளில் பாரியளவு காணிப் பிரச்சினை இருக்கின்றது. வன இலாகா மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள காணிப் பிரச்சினைகளே அதிகமாகவுள்ளன. அத்துடன் பல வருடங்களாக இருக்கின்றவர்களுக்கு அக் காணிக்கான ஆவணங்கள் இல்லாமல் இருக்கின்றன.



இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் விதமாகவே ஜனாதிபதி செழிப்பின் பார்வை என்ற செயற்றிட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் வீடுகள் கட்டியிருந்தாலும் சரி விவசாய காணிகள் மற்றும் தோட்டக்காணிகளானாலும் சரி மக்களின் பாவனையில் நீண்டகாலமாக இருக்கும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களை பெற்றுக்கொள்ள விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்குள் பிரதேச செயலகங்களின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்படிவங்களை எமது அலுவலகத்திலும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளதுடன் காணி ஆணையாளர் நாயகத்தினால் சுற்றறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

# இந்திய இழுவை படகால் உள்ளூர் படகு மூழ்கடிப்பு

***கரவெட்டி தினகரன் நிருபர்***

பருத்தித்துறை முனை கடற்பரப்பில் அத்துமீறிய இந்திய இழுவைப் படகு ஒன்று உள்ளூர் மீனவர்களின் படகு ஒன்றை மோதி மூழ்கடித்துள்ளதாக தெரியவருகிறது.

நேற்று காலை 9 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் பயணித்த மூன்று மீனவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பி நீந்தி வருகையில் ஏனைய மீனவர்களால் காப்பாற்றப்பட்டு கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகளின் இத் தாக்குதலால் குறித்த மீனவர்கள் தமது படகினையும் மீன்பிடி வலைகளையும் இழந்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# குப்பைகளை தரம் பிரிக்காவிடின் கைது செய்யுமாறு நாம் கூறவில்லை

## சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

***சாவகச்சேரி விசேட நிருபர்***

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள் கழிவுகளை உக்கும், உக்காத கழிவுகளாக தரம் பிரித்து வழங்காதபட்சத்தில் அவர்கள் மீது வழக்குத் தொடருமாறு சபையில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நகர சபையின் மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில்,

மக்கள் உடனடியாக மாற்றத்திற்கு உட்பட மாட்டார்கள். மக்கள் மனம் மாற கால அவகாசம் வேண்டும். எமது மக்கள் குப்பைகளை தரம் பிரித்து வழங்கவில்லை என்பதற்காக அவர்களை பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கக்கூடாது. மக்களுக்கு இது தொடர்பில் உரிய விழிப்புணர்வு வேண்டும்.

செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை மாத்திரமே ஏற்றுக்கொள்வோம் என்ற சபைத் தீர்மானம் மக்களை ஒழுங்காகச் சென்றடையவில்லை. இவ் விடயம் சபை எல்லைக்குள் 25 சதவீத மக்களிடம் மாத்திரமே சென்றடைந்துள்ளது. அத்துடன் சுகாதாரத் தொழிலாளர்கள் குறித்த சபைத் தீர்மானத்தின் பின்னர் உரப்பைகளில் கட்டி வைக்கப்படும் தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை மாத்திரமே அகற்றி வருகின்றனர் என்றனர்.

# உயிருடன் இருந்த தாய்க்கு மரணச் சான்றிதழ் தயாரிப்பு

***புதுக்குடியிருப்பு நிருபர்***

உயிருடன் இருக்கும் ஒருவருக்கும், ஏற்கனவே உயிரிழந்த ஒருவருக்கும் போரின்போது உயிரிழந்ததாக போலி மரணச் சான்றிதழ் தயாரித்த கிராம சேவகர் உட்பட மூவருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியைச் சேர்ந்த யுவதியொருவர் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார். அவர் அங்கு தனக்கான குடியுரிமையை பெற்றுக்கொள்வதற்காக அவரது பெற்றோர் போர் காலத்தில் உயிரிழந்துள்ளதாக போலியான மரணச் சான்றிதழ் தயாரித்துள்ளார்.

இவ் யுவதியின் தந்தை 2014 ஆம் ஆண்டு நோய் காரணமாக உயிரிழந்த நிலையில் அவரது தாயார் தற்போதும் வழ்ந்து வருகின்றார். ஆனால் இவர்கள் இருவரும் போரில் உயிரிழந்துள்ளதாக இப் போலி மரணச் சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிசாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து இதனை தயாரித்து கொடுத்த குற்றச்சாட்டில் கிராம சேவையாளர், மரண விசாரணை அதிகாரி, பிரான்சில் உள்ளவரின் சகோதரி ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து அவர்கள் மூவரையும் பிணையில் செல்ல அனுமதி வழங்கிய நீதிமன்றம் அடுத்த வழக்கு விசாரணையினை நவம்பர் 30ஆம் திகதிக்கு தவணையிட்டு உத்தரவிட்டார்.

# முல்லையில் திலீபனின் நினைவு நிகழ்வுக்கு நீதிமன்றால் தடை

***புதுக்குடியிருப்பு நிருபர்***

முல்லைத்தீவு மாவட்டத்தில் திலீபனின் நினைவு நிகழ்வுகளை செய்வதற்கு நீதிமன்றம் மூலம் பொலிசார் தடையுத்தரவு பெற்றுள்ளதுடன் அத் தடையுத்தரவு பலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15.09.2020 தொடக்கம் 26.09.2020 வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் திலீபன் நினைவு நிகழ்வு நடத்தக்கூடாது என்று முல்லைத்தீவு பொலிசார் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்றுள்ளனர்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான வி.விக்னேஸ்வரன், கஜேந்திரன், கஜேந்திரகுமார், து.ரவிகரன் மற்றும் வர்த்தக சங்க தலைவர்கள் என பலரது பெயர்கள் குறிப்பிட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் தடைக் கட்டளை பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தடையுத்தரவு தொடர்பில் பொலிசார் விடுத்த கோரிக்கை பத்திரத்திற்கு அமைவாக அரசினால் தடைசெய்யப்பட்ட அமைப்பு தொடர்பில் எந்தவிதமான நிகழ்வுகளையோ கூட்டங்களையோ 15.09.200 தொடக்கம் 26.09.2020 வரை நடத்துவதற்கு 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 106 (1) (3) பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதாக நீதிபதியால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பத்திரிகை முகவர் மீது வாள்வெட்டு தாக்குதல்

***யாழ்.விசேட நிருபர்***

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றின் விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்தவரை வழிமறித்த கும்பல் ஒன்று, அவரை வாளால் வெட்டிவிட்டு அவர் பயணித்த மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கோண்டாவிலைச் சேர்ந்த பாலச்சந்திரன் மதனகரன் என்ற 43 வயதான நபரே வாள்வெட்டுக்கு இலக்காகி தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொள்ளைக் கும்பல் ஒன்றே இவ்வாறு வாளாள் வெட்டிவிட்டு அவரது மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிசார் தெரிவித்தனர்.

# மரங்களில் ஆணி அறைந்து விளம்பரம் காட்சிப்படுத்த தடை

***சாவகச்சேரி விசேட நிருபர்***

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வீதி ஓரங்களில் காணப்படும் பயன் தரு நிழல் மரங்களில் ஆணி அறைந்து விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சாவகச்சேரி நகராட்சி மன்றம் முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக சபை உறுப்பினர்கள் கூறுகையில்,

பொது விளம்பரங்களை மரங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பஸ் நிலையம் ஆகியவற்றில் ஒட்டக்கூடாது என சபையில் ஏற்கனவே தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தோம். ஆனால் சில நிறுவனங்கள் வீதியோரங்களில் காணப்படும் மரங்களில் ஆணி அறைந்து விளம்பரங்களை காட்சிப்படுத்தி வருகின்றனர்.

சில இளைஞர்கள் இணைந்து சாவகச்சேரி நகர் பகுதியில் மரக் கன்றுகளை நாட்டி பராமரித்து வரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் அந்த இளைஞர்களின் செயற்பாட்டினை மழுங்கடிப்பதாக அமைந்துள்ளது. சிறிய மரங்களில் கூட ஆணி அறைந்து விளம்பரங்களை காட்சிப்படுத்துகின்றனர். இதனால் அந்த மரங்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றன என்றனர்.

# பொது மக்கள் முறைப்பாட்டு பெட்டிகள் வழங்கல்

***ஓமந்தை விசேட நிருபர்***

பொதுமக்கள் முறைப்பாடு மற்றும் ஆலோசனைப் பெட்டிகள் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தின் அனுசரணையில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தம்மிக்க பிரியந்தவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



வன்னிப் பிராந்தியத்தில் பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் பகுதிகளான பேருந்து நிலையம், பிரதேச செயலகம் மாவட்டச் செயலகம், பாடசாலைகள் வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் பொதுமக்கள் ஆலோசனை மற்றும் முறைப்பாட்டு பெட்டிகள் பொருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பெட்டிகளில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் நேரடியாக பொலிஸ் மாஅதிபருக்கு தமது பெயரைக் குறிப்பிட்டும், குறிப்பிடாமலும் தெரிவித்துக்கொள்ள முடியும். இவற்றை சேகரிப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இதனை நடைமுறைப்படுத்தவும் பொறுப்பதிகாரிகளுக்கு செல்லவேண்டிய தகவல்களை அவரிடம் வழங்கவும் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்குச் செல்லவேண்டிய தகவல்களை அவரிடம் வழங்கவும் பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்குச் செல்லவேண்டிய தகவல்களை அவரிடம் வழங்கவும் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# போத்தலை உண்டவருக்கு வாயிலிருந்து இரத்தம்

***ஓமந்தை விசேட நிருபர்***

கண்ணாடிப் போத்தலை உட்கொண்டு வாயில் காயத்துக்குள்ளான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் அமர்ந்திருந்த நபர் ஒருவர்,கண்ணாடி போத்தலை உடைத்து அதனை வாயில்போட்டு உணவாக உட்கொண்டுள்ளார். இதனால் காயமடைந்து வாயிலிருந்து குருதி வெளியேறிய நிலையிலும் அந் நபர் உட்கொள்வதை நிறுத்தவில்லை.



இதனை அவதானித்த சிலர் வைத்தியசாலையில் கடமையில் இருந்த பொலிசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவத்தை அவதானித்த பொலிசார் குறித்த நபரை மீட்டு அவ்விடத்திலிருந்து அகற்றினர்.





பதுளை மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டிருந்த 339 குடும்பங்களுக்கு பாதுகாப்பான இடங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு காசோலைகளும், காணி உரிமை இல்லாதவர்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களும் வழங்கும் நிகழ்வு நேற்று பதுளை அரச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்சன தெனிபிட்டிய, டிலான் பெரேரா, பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் தமயந்தி பரணகம ஆகியோர் கலந்துகொண்டனர்.

(படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)

## பாடசாலை வளாகத்தில் மலைப்பாம்பு



ஜனதாபுர மகா வித்தியாலயத்தில் பன்னிரண்டு அடி நீளமும்,26 கி.கிராம் 800 கிராம் எடையும் கொண்ட மலைப் பாம்பு ஒன்று பாடசாலை வளாகத்தினுள் புகுந்துள்ளது.

இதனை அவதானித்த ஜனதாபுர மக்கள் அதனை பிடித்து லுணுகலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் அம்மலைப்பாம்பினை வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ருவன்புற அதிவேக நெடுஞ்சாலை பணிகள் துரிதம்


## இரத்தினபுரியிலிருந்து கொழும்புக்கு ஒரு மணித்தியால பயணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கொழும்பையும் இரத்தினபுரியையும் இணைக்கும் ருவன்புற அதிவேக நெடுஞ்சாலையின் அமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட நெடுஞ்சாலைகள் காரியாலய பொறியியலாளர்கள் நேற்று தெரிவித்தனர்.

இந்த அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் இரத்தினபுரியிலிருந்து கொழும்புக்கு ஒரு மணித்தியால துரித பயணத்தில் சென்றடையலாம் என மாவட்டநெடுஞ்சாலைகள் பொறியியலாளர் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

தெற்கு அதிவேக பிரதான சந்தியான கஹதுடுவ நுழைவாயிலில் இருந்து பெல்மதுளை வரையிலான 73. 9 கிலோ மீற்றர் வீதியே இத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கிணங்க இதன் முதற் கட்டப்பணிகள் கஹதுடுவ முதல் இங்கிரிய வரையுள்ள 23.4 கிலோ



மீற்றர்களும் இரண்டாம் கட்ட பணிகள் இங்கிரிய முதல் இரத்தினபுரிவரையுள்ள 21 கிலோ மீற்றர்களும் மூன்றாம் கட்டமாக இரத்தினபுரி முதல் பெல்மதுளை வரையிலான 28.6 கிலோ மீற்றர்களும் மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவ்வீதி அபிவிருத்திப் பணிகள் மூன்று வருட காலப்பகுதிக்குள் நிறைவு செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளதுடன், கஹதுடுவ முதல் இங்கிரிய வரையிலான இதன் முதற் கட்டப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதன் முதற்கட்டப் பணிகள் 80 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தினால் இந்த அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகளை மேற்கொள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அந்நிறுவனங்களுக்கு அதிகளவு நிதியை வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் அமைப்புப் பணிகளை உள்நாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகள்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை மாவட்டத்தில் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டிருக்கும் இருநூற்று ஐம்பது குடும்பத்தினருக்கும் இருநூற்று ஐம்பது வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இடர் முகாமைத்துவ திணைக்களத்தின் பதுளை மாவட்ட இணைப்பாளர் சன்ஜீவ சமரக்கோன் மேற்படித் தகவல்களை வழங்கியுள்ளார். கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மண்சரிவு மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு தற்காலிகமான கூடாரங்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வரும் இருநூற்று ஐம்பது குடும்பங்களுக்கு நிர்மாணிக்கப்படும் வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

## பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

# பகிடிவதையில் ஈடுபட்ட ஏழு கலைப்பீட மாணவர்களுக்கு வகுப்புத்தடை

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட ஏழு கலைப்பீட தமிழ்மொழி மூலமான சிரேஷ்ட மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பகிடிவதை தீர்மானத்திற்கெதிரான கோஷ்டி மோதலுக்கு எதிராகவே கலைப்பீட தமிழ் மொழி மூல சிரேஷ்ட மாணவர் ஏழு பேருக்கு ஒழுக்காற்றுக்குழு வகுப்புத் தடை விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு கலைப்பீடத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு அருகிலுள்ள மண்டபத்தில் நான்காம் வருட மற்றும் மூன்றாம் வருட தமிழ் மொழி மூல சிரேஷ்ட மாணவர் குழுவினருக்கும் இரண்டாம் வருட தமிழ் மொழி மூல சிரேஷ்ட மாணவர் குழுவினருக்கும் இடையில் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் இடம்பெற்ற கைகலப்பு காரணமாக தமிழ் மொழி மூல சிரேஷ்ட மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதில் நான்காம் வருட மாணவர்கள் நால்வரும் மூன்றாம் வருட மாணவர்கள் மூவருமாக ஏழு மாணவர்களுக்கு தண்டணை வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கு ஆரம்பத் தண்டனையாக ஐந்து வார வகுப்புத் தடை விதிக்கப்படலாம். இதில் அடையாளம் காணப்பட்ட ஏழு மாணவர்களுக்கு தண்டணை வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர்.

# விமலசுரேந்திரவின் 146 ஆவது ஜனன தினம்





நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

இலங்கை நீர் மின்சாரத்தின் முன்னோடி விமலசுரேந்திரவின் 146 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு காசல் ரீ நீர்தேக்க வனப் பகுதியில் 200 மரக்கன்றுக்கள் நேற்றுமுன்தினம் நடப்பட்டது

இலங்கை முதலாவது நீர்மின் உற்பத்தி நிலையமான நோட்டன் விமலசுரேந்திர மின் நிலையத்தை உருவாக்கியவர் விமலசுரேந்திர ஆவார். இன்றைய மரக்கன்று நடுகை நிகழ்வில் லக்ஷபான மின்சாரச்சபை பொறுப்பதிகாரி சி.ஜீ.எஸ்.குனசேகர உட்பட பலர் கலந்து கொண்டனர் .

# டிக்கோயா தரவளையில் விபத்து



நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாஞ்சிமலை பிரதான வீதியின் டிக்கோயா தரவளை பகுதியில் வேன் ஒன்றும் லொறியும் மோதுண்டு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

போடைஸ் பகுதியில் இருந்து ஹற்றன் நோக்கி பயணித்த சிறியரக லொறி ஒன்றும் ஹற்றன் பகுதியில் இருந்து போடைஸ் பகுதியினை நோக்கி பயணித்த வேன் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் பயணித்த எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. வாகனம் இரண்டுக்கும் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

# போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்களை விடுவிக்க கடும் சட்டம்

காவத்தை தினகரன் விசேட நிருபர்



சப்ரகமுவ மாகாணத்தில் பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுவிப்பதற்கான கடுமையான சட்டமொன்று அமுல்படுத்தப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண பாதுகாப்பு குழுவினர்களுடனான கலந்துரையாடலொன்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்றுமுன்தினம் (17) மாகாண கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் போதைப்பொருளுக்கு அடிமையாகி வரும் பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுவிப்பதற்கான சட்டம் ஒன்று கடுமையாக அமுல்படுத்தப்படும்.

பாடசாலை மாணவர்களை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும். இதை கவனத்திற் கொண்டு அனைவரும் செயற்படுவது அவசியமாகும்.

மாணவர்களை போதைப்பொருளில் இருந்து விடுவிப்பது குறித்த சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அனைவரினது ஒத்துழைப்பும் அவசியம் தொடர்பாக வலியுறுத்தினார்.

பாடசாலை கல்வியை நிறைவுசெய்த மாணவர் தலைவர்களின் அமைப்பு ஒன்று அமைப்பது அவசியம்.

பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளை பொலிஸார் அறிந்து கொள்வதற்காக "பொலிஸூக்கு எழுதுங்கள்" என்று பெயரிடப்பட்ட பெட்டி ஒன்று சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் பொருத்துவதற்கு சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் தனியார் வகுப்புகள் நடைபெறும் இடங்களில்;

போதைப்பொருள் வியாபாரம் நடைபெறுவதை கண்டு பிடிப்பதற்காக சி.ஐ.டி குழுவினர் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டபிள்யு.வீரசிங்க தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண சிறைச்சாலைகளில் வெளிபாதுகாப்பு குறித்து விசேட பாதுகாப்பு குழுவொன்றை அமர்த்துவது தொடர்பாக மேற்படி பாதுகாப்பு குழுவின் ஊடாக பாதுகாப்பு அமைச்சிக்கு கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப்பட்டது.


புதுமையான மாற்றங்களுடன்
வெளிவருகிறது!
தினம் தினம் புதுமைகளுடன்
தினகரன்
THINAKARAN
සමනිලයාන செய்தி,
அரசியல் அலசல்,
ஆழப்பார்வையுடன்...
தினமும்...
மலைச்சாரல்
நகர்வலம்
கிழக்கின் குரல்
அயல்நாட்டு செய்திகள்
சர்வதேச செய்திகள்
தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
திங்கள்
சைவ மஞ்சரி
செவ்வாய்
கிறிஸ்தவ மஞ்சரி
லோரன்ஸ் செல்வா
புதன்
முத்தாரம்
வியாழன்
மங்கையர் முற்றம்
லக்ஷ்மி
வெள்ளி
கலைக் கதம்பம்
சைத்திரியன்
வெள்ளி
ஆலமுல் இஸ்லாம்
- அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk
வெள்ளி
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
சனி
புதுப்புனல்
ஒக்டோபர் 2 முதல்
உங்கள் கரங்களில்...
LAKE HOUSE
லேக்ஹவுஸ் வெளியீடு

# புத்தளம் இந்து மத்திய கல்லூரி ஆசிரியர்கள் அலிசப்ரி றஹீம் எம்.பிக்கும் இடையிலான சந்திப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் இந்து மத்திய கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர் உள்ளிட்ட ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்தர பிரிவு ஆகியவற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி றஹீமை நேற்றுமுன்தினம் அவரது புத்தளம் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். கல்லூரியின் அதிபர் பி.ஆர். தம்பிதுரை தலைமையிலான பிரதி அதிபர் திருமதி தர்ஷினி சிவதர்ஷன், உயர்தர பிரிவு பகுதி தலைவர் எஸ்.எச்.அப்துல் மதீன், இடைநிலை பிரிவு பகுதித் தலைவர்களான ஆர். ஜெயந்தி, எஸ்.ஹோம் பிரகாஸ், ஆரம்ப பிரிவு பகுதி தலைவர் கே. சுமந்திரன் ஆகியொர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். இதன்போது, 33 வருடங்களின் பின்னர் புத்தளம் தொகுதியிலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீமுக்கு , புத்தளம் இந்து மத்திய கல்லூரியின் அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள் குழுவினர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் – கார் மோதி விபத்து; 7மாத குழந்தை பலி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் கொழும்பு முகத்திடலில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை (17) இடம் பெற்ற வீதிவிபத்தில் 7 மாத ஆண் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன், தாயும், தந்தையும் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுரங்குளி கணமூலை மிஹ்ராஜ் புரத்தைச் சேர்ந்த முஹம்மது பாசில் முஹம்மது பாஹிர் (வயது 7 மாதம்) எனும் ஆண் குழந்தையே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளுடன், சிறிய ரக கார் ஒன்று மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அனகாரிக தர்மபாலவின் 156 ஆவது ஜன்ம தின நிகழ்வு



அனகாரிக தர்மபால வின் 156 ஆவது ஜன்ம தின நிகழ்வு நேற்று முன்தினம் (17) இரத்தினபுரி தர்மபால மகா வித்தியாலயத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நடைபெற்றது. இதன்போது மேற்படி தர்மபால மகா வித்தியாலயத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அனகாரிக தர்மபால வின் உருவச் சிலைக்கு மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மலர் அஞ்சலி செலுத்தினார். இதேவேளை அனகாரிக தர்மபால வின் 156 ஆவது ஜன்ம தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் சப்ரகமுவ மாகாண சபை வளாகத்தில் ஆளுநரால் மரம் ஒன்றும் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் மத குருமார்கள் மற்றும் இரத்தினபுரி மாநகர பிதா டிரோன் அத்தநாயக்க உட்பட கல்வி அதிகாரிகள் அதிபர் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பலாங்கொடை அரச வைத்தியசாலைக்கு நான்கு மாடிக் கட்டிடம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை அரச வைத்தியசாலைக்கு 50 மில்லியன் ரூபா செலவில் நான்கு மாடிக்கட்டிடமொன்று அமைக்கப்படவுள்ளதாக இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அகில சாதிய எல்லாவள நேற்று தெரிவித்தார்.

பலாங்கொடை அரச வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் திடீர் விஜயம் மேற்கொண்ட அவர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 15ஆம் திகதி மேற்கொண்ட விஜயத்தின் போது பலாங்கொடை அரச வைத்தியசாலையில் நிலவிய பல குறைபாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

வைத்தியசாலையின் மிகவும் அவசர தேவையாக இனங்காணப்பட்ட அவசர சத்திரசிகிச்சை பிரிவு, பரிசோதனை ஆய்வு கூடம் உட்பட இன்னும் பல முக்கிய தேவைப்பாடுகள் எதிர்வரும் மாதங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

---

සළුසල
சலுசல
SALU SALA
ශ්‍රී/ස ලංකා සළුසල
Lanka Salusala Limited
லங்கா ஸலூ சலா லிமிட்டெட்

## சலுசலவுடன் இணைந்து புடைவை உற்பத்தியை மேற்கொள்வதற்கான அழைப்பு

வரையறுக்கப்பட்ட சலுவல நிறுவனம், இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமானது. அது இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் பிரிவுகளின் ஆடை உற்பத்திக்காக 1991ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையின் ஆடை மற்றும் புடைவை தேவைப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில் எதிர்காலத்தில் இந்த நிறுவனத்தை பற்றிக் கைத்தறி ஆடை மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதன்படி, கௌரவ இராஜாங்க அமைச்சரின் அனுமதியுடன், எதிர்காலத்தில் முதலீட்டாளர்கள் / உற்பத்தியாளர்களுடன் இணைந்து கூட்டு வியாபாரத்தை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆர்வமுள்ள தரப்பினர், தங்களது **EOI** கடிதத்தை சீல் செய்யப்பட்ட கடித உறையில் பதிவுத் தபாலில் தலைவர், சலுசல, இல 93, ஜாவத்த வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு இம்மாதம் 30ஆம் திகதி காலை 10.30க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக கடிதங்களை சமர்ப்பிபோர், வார நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை சமர்ப்பிக்க முடியும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், **"சலுசலவுடன் புடைவை உற்பத்திக்கான நிபந்தனைகசு" (TOR)** என்று குறிப்பிடப்படுவது அவசியம்.

மேலதிக தகவல்களை தலைவர், சலுசல, இல: 93, ஜாவத்தை வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு வருவதன் மூலமோ அல்லது 011 2586732 என்ற தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதன் மூலமோ வார நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இன்று (19.09.2020) தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 09ஆம் திகதி வரையிலான 21 நாட்களுக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்**
**சலுசல,**
இல:93, ஜாவத்தை வீதி,
கொழும்பு 05
தொலைபேசி இல: 011 2586732
E-mail: lankasalusalalimited@gmail.com

---

## தங்க நகைகள் ஏலவிற்பனை

### சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி

சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி கண்டி, கட்டுகஸ்தொட்ட. குண்டசாலை குருநாகல், தெஹிவளை ஆகிய கிளை காரியாலயங்களில் தங்க கடன் பிரிவில் அடகு வைக்கப்பட்ட 2020.05.31 திகதி வரை கால எல்லை நிறைவடைந்த தங்க நகைகள் 2020.09.26 திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இல 11, கந்தே வீதி, கண்டி எனும் இடத்தில் அமைந்துள்ள சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படவுள்ளது.

**சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி**
**கண்டி**

எவ்வித முன்னறிவித்தலுமின்றி இவ் ஏலவிற்பனையை பிற்போடுவதற்கும்/நிறுத்துவதற்கு இணைந்து நடத்துவதற்கும் சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி தன்னகத்தே கொண்டுள்ளது.

---

**1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் விசேட ஏற்பாடுகள் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை**

S&S SINCE 1892

## அமானா வங்கி பிஎல்சி
## பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை

Amāna Bank It's Your Bank

**11383ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**காணி-1**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளேபற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மற்றும் மொறட்டுவ நகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட எகொடஉயன கிராமத்தில் அமைந்துள்ள, எகொடஉயன வீதி, இல. 186/47 என்ற முகவரியைக் கொண்ட அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையியலாளர் எஸ். ராசப்பா அவர்களால் வரையப்பட்ட 2012 பெப்ரவரி 21ஆந் திகதியிடப்பட்ட 103/2012 ஆம் இலக்க வரைபடத்தில் **துண்டு 01A** எனக் குறிப்பிடப்பட்டுள்ள **"எஹலகஹவத்த"** என அழைக்கப்படும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: (A-00:R-00-P-21.5)**

அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக கிராம உத்தியோகத்தர் பிரிவு 556B எகொடஉயன தெற்கில் குறித்த காணி அமைந்துள்ளது.

மேலே கூறப்பட்ட காணி, அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையியலாளர் எஸ்.ஜே. பீரிஸ் அவர்களால் வரையப்பட்ட, 1995 ஜூலை 5ஆந் திகதியிடப்பட்ட 3912ஆம் இலக்க வரைபடத்தில் **துண்டு 01** எனக் குறிப்பிடப்பட்டுள்ள **"எஹலகஹவத்த"** என அழைக்கப்படும் காணியின் மீள் அவையாகும்.

**காணி - 2 (பாதைக்கான ஒதுக்கீடு)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பள்ளேபற்று, எகொடஉயன கிராமத்தில் அமைந்துள்ள, **துண்டு F** எனக் குறிப்பிடப்பட்டுள்ள **"எஹலகஹவத்த"** (பாதைக்கான ஒதுக்கீடு என அழைக்கப்படும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: (A-00: R-00:P-1.5)**

அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக D225/101 என்ற இலக்கத்தின் கீழ் தெல்கந்த நுகேகொட காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணி - 3 (பாதைக்கான ஒதுக்கீடு)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பள்ளேபற்று, எகொடஉயன கிராமத்தில் அமைந்துள்ள **துண்டு H** எனக் குறிப்பிடப்பட்டுள்ள **"எஹலகஹவத்த"** (பாதைக்கான ஒதுக்கீடு என அழைக்கப்படும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: (A-00:R-00:P-18.5)**

அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக D225/102 என்ற இலக்கத்தின் கீழ் தெல்கந்த நுகேகொட காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு **வீ. கனகரத்னம்** அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11383ஆம் இலக்க அடிப்படை பிணை உறுதி மூலம் அடகு வைத்தவரான மீராசாஹிப் மொஹமட் சஜான் மற்றும் அஹமது லெப்பை முஹம்மது றியால் கடனாளி ஆகியோரால்,

**அமானா வங்கி பிஎல்சி (முன்னாள் வரையறுக்கப்பட்ட அமானா வங்கி என அழைக்கப்பட்டது) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.**
**அமானா வங்கி பிஎல்சி யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**
**2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு**
**எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.**

**கொடுப்பனவு செய்யும் முறை:**

ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½ % (இரண்டரை சதவீதம்)
(4) மொத்த விளம்பரச் செலவு
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.1,500/=
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் வங்கியினால் தீர்மானிக்கப்படும்.

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011-7756000 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் அமானா வங்கி பிஎல்சி யின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

**"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது".**

## ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

**ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர் - 128 வருடகால மகோன்னத சேவை**

| | |
|---|---|
| **தலைமை அலுவலகம்:** | **நகர அலுவலகம்** |
| **24, டொரிங்டன் வீதி, கண்டி** | **6A, பெயார் பில்ட் கார்டன், கொழும்பு-08.** |
| **தொலைபேசி 081-2227593** | **தொலைபேசி 011-2671467, 011-2671468** |
| **தொலை/பெக்ஸ்: 081-2224371** | **தொலை/பெக்ஸ் 011-2671469** |
| **மின்னஞ்சல்:** schokman@sltnet.lk | **மின்னஞ்சல்:** schokman@samera1892.com |

**இணையத்தளம் www.sandslanka.com**

like us on facebook

---


## 17.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 746,703
## பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 29,981,360.00

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 28

www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

### வாசனா சம்பத
වාසනා සම්පත Vasana Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1614
திகதி 2020.09.17

வெற்றி இலக்கங்கள் S
அன்றும் இன்றும் வீரன்
வெற்றி இலக்கங்கள் 29 58 62 73

| பரிசு | பரிசுக்கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000,000/- | 0 |
| 02 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 02 |
| 03 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 2,000/- | 71 |
| 04 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500/- | 163 |
| 05 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 3,871 |
| 06 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 60/- | 2,340 |
| 07 ஆம் பரிசு | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 58,102 |
| 08 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 9,728 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,307,600.00

அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு
ரூ. 23,694,758.90

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD 32, ඩඩ්ලි සේනානායක මාවත N.W.J. ... කොළඹ 01.
PRIZES OF FIVE LAKHS OR OVER ARE LIABLE TO GOVT TAXES. WINNERS MUST PRODUCE NATIONAL IDENTITY CARD TO RECEIVE PRIZES. WINNING TICKETS ARE VALID FROM THE DAY OF THE DRAW FOR A PERIOD OF SIX MONTHS ONLY.

### கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2543 சீட்டிழுப்பு திகதி 17.09.2020

ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 29 47 49 55

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 184 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 441 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10636 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6953 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 174483 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 31831 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 224,537

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை
ரூ. 8,077,000.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 61,854,267.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### දරු දිරි සම්පත
தரு திரி சம்பத DARU DIRI SAMPATHA

திகதி 2020/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 019

ஆங்கில எழுத்து P வெல்லப்பட்ட இலக்கங்கள் 02 04 15 55

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 1,000,000/- வீதம் | - |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 50,000/- வீதம் | 02 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000/- வீதம் | 93 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500/- வீதம் | 180 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- வீதம் | 4,499 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 40/- வீதம் | 2,337 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- வீதம் | 59,568 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20/- வீதம் | 8,908 |

விசேட இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 6 3 6 | ரூ.1,000.00 | 30 |
| 2ம் பரிசு | 6 3 6 | ரூ.500.00 | 280 |
| 3ம் பரிசு | 3 6 | ரூ.50.00 | 2,700 |

இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டமொத்த பரிசுத் தொகை
ரூ. 2,500,900/-

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 6,691,821.60

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

### Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 615
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 17/09/2020

ஆங்கில எழுத்து N சுப்பர் இலக்கம் 17 வெற்றி இலக்கங்கள் 02 43 46 71

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 06 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 161 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 364 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,960 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,825 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 147,121 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 26,922 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ .235,405,516.35

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,170,563.60
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.15,631,962.40

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 6,552,860.00

### மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4248 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 17-09-2020

வெற்றி எழுத்து T வெற்றி இலக்கங்கள் 1 3 1 5 7 8

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 1 3 1 5 7 8 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 3 1 5 7 8 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 1 5 7 8 | ரூபா. 10,000/- | 112 |
| 4 ஆம் பரிசு | 5 7 8 | ரூபா. 1,000/- | 1,120 |
| 5ஆம் பரிசு | 7 8 | ரூபா. 100/- | 11,197 |
| 6ஆம் பரிசு | 8 | ரூபா. 20/- | 110,920 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 1 3 1 5 7 | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 1 3 1 5 | ரூபா. 1,000/- | 112 |
| 9ஆம் பரிசு | 1 3 1 | ரூபா. 100/- | 1,157 |
| 10ஆம் பரிசு | 1 3 | ரூபா. 50/- | 11,046 |
| 11ஆம்பரிசு | T | ரூபா. 20/- | 44,245 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,543,000.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,632,896.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

# Observer JOBS

We change your world

Tel: (011) 242 9361/ 242 9362/ 242 9365 Mobile : (077) 727 0012 Fax : (011) 242 9360

## The following employment vacancies were published in the Sunday Observer on 13th September 2020.

### Accounting / Auditing / Finance

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Supreme Petro Lanka (Pvt) Ltd | Accountant |
| Esta International (Privet)Limited | Accounts Assistant |
| Wmom-Essentials | Accounts Asst ( Female ) |
| MN Homes Developer(Pvt) Ltd | Accounts Clerk |
| Informex Concreting (Pvt) Ltd | Accounts Clerk |
| MAG | Finance Officer |

### Agriculture / Dairy / Environment

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Maga Engineering (Pvt) Ltd | Environmental & Social Officer |

### Banking/Leasing/Insurance/Stock Brokering

| COMPANY | DESIGNATION |
|---|---|
| State Bank of India | Banking Assistant |
| SDB bank | Chief Risk Officer |

### Construction/Architect/Quantity Surveying

| COMPANY | DESIGNATION |
|---|---|
| NTP Ceylon (Pvt) Ltd | Architect |
| State Ministry of Provincial Councils - & Local Government Affairs | Assistant Quantity Surveyor |

### Corporate Management/Analyst

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Civil Aviation Authority of Sri Lanka | Additional Director General / Deputy Director General |
| Civil Aviation Authority of Sri Lanka | Director |
| Sri Lanka Ports Authority | Managing Director |

### Customer Relations/Public Relations

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Metro Lands | Customer Care Officer |

### Drivers /Security / House Keeping & Other

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Rajarata University | Security Inspector |

### Engineering (Mech/Civil/Elect/Auto)

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Maga Engineering (Pvt) Ltd | Desingn Engineer / Maintenance Engineer |
| State Ministry of Provincial Councils - & Local Government Affairs | Material Engineer |
| NTP Ceylon (Pvt) Ltd | Senior Electrical Engineer |
| Company Name Withheld | Site Engineer |
| Company Name Withheld | Site Engineer / Technical Officer |
| KPMG Executive Search (Pvt) Ltd | Vice President - Growth Initiatives |

### Hospitality & Tourism/Hotel

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Chinese Hotel |
| Hotel Sanushi | F & B Waitress/House Keeping/ Room Attendent/Gardener |
| American Caterers (Pvt) Ltd | Manager |

### Healthcare/Nursing

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Dental Surgeon - For a Dental Clinic |
| Company Name Withheld | Trainee Operating Theatre Assistants - For a Health Care Company |

### HR & Admin/Training/Legal

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Castle A G ( Pvt ) Ltd | Administration Manager ( Power House ) |
| MAG | Field Human Resource Assistant |
| Jayaratne Group of Companies | Human Resources Manager |
| Airport and Aviation Services - (Sri Lanka) Limited | Management Assistant |
| Watts Engineering | Trainee Administration Officer |

### IT - Computer Operators/Graphics

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Data Entry Clerk |
| Intermart Printers (Pvt) Ltd | Graphic Designer / Trainee Graphic Designer |

### IT - Software/Network/Systems/Telecom

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Peoples Bank | Chief Manager - IT Infrastructure & Operations |
| NTP Ceylon (Pvt) Ltd | Senior System Engineer |

### Logistics/Warehouse/Transport

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Imperial Teas Group | Banking and Documentation Assistant |
| Ace Healthcare (Pvt) Ltd | Procurement Manager |
| MAG | Store Keeper/Warehouse Officer |
| Company Name Withheld | Stores / Supply Chain Coordinator / Stores Assistants - For a Health Care Company |

### Marketing & Sales/Branding

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Junior Marketing Executive |
| Gurind Accor (Pvt) Ltd | Manager - Business Development |
| Sumathi Holdings | Manager - Lokx Express Courier |
| Company Name Withheld | Marketing & Sales Executive |
| Company Name Withheld | Marketing Executive - Coconut Products |
| Company Name Withheld | Marketing Manager / Marketing Executive |
| Metro Lands | Project Officer / Executive / Asst.Manager |
| Intermart Printers (Pvt) Ltd | Trainee Sales Coordinator |
| KPMG Executive Search (Pvt) Ltd | Vice President - Sales & Marketing Health Sector |

### Manufacturing/Operations

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Intermart Printers (Pvt) Ltd | Production Supervisor |

### Part Time/Walk In interviews

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Cook / Housemaid |

### QA/QC/Supervisory/Technical

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Willesden College International | Mathematics,Chemistry and Physics Teachers |
| Sojitz Kelanitissa (Pvt) Ltd | Power Plant Operation Assistant |
| Dilfoods Private Ltd | Quality Controller |
| Esta International (Privet)Limited | Technical Officer |
| Company Name Withheld | Technical Officer ( Civil) |
| Maga Engineering (Pvt) Ltd | Technical Officers |
| Intermart Printers (Pvt) Ltd | Trainee Quality Assurance Assistant |
| Watts Engineering | Trainee Technician |

### Teaching/Academic/Research/Library

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Negombo South International School | Spoken English Instructress / Teacher London O/L / Primary / Pre School Trainee Teachers / Gr 1,2,3,4 Class Teachers |
| Musaeus College | Assistant Teacher - Combined Maths / Mathematics ( Females ) |
| University Of Colombo | Coordinator - Of The extension Courses In English |
| Eastern University | Director |
| The British School In Colombo | Drama Teacher - Junior School |
| University of Kelaniya | Lecturer / Senior Lecturer Gr.1/11 |
| Central Environmental Authority | Librarian |
| ACBT | Part Time Lecturers |
| International Teacher Training Academy | Primary Teachers |
| Saegis Campus | Registrar |
| NSBM Green University Town | Senior Lecturer/ Lecturer/ Temporary Lecturer |
| Rajarata University | Sub Warden |
| Smart International | Teacher |
| Company Name Withheld | Teacher - Female |
| The British School In Colombo | Teacher of Mandarin/ Sihala Language |
| Highlevel International School | Teachers |
| Zahira College | Teachers |
| Bishops College | Teachers - ( A/L , O/L, Primary , Nursery ) |
| Alexandra College | Teachers ( English Medium ) |
| Alethea Group of Schools | Teaching |

## Find

GOVERNMENT GAZETTE

For more details about the above vacancies, please refer SUNDAY OBSERVER newspaper on 13th September 2020

To apply visit www.observerjobs.lk

LAKE HOUSE Sunday Observer Observer JOBS

நன்னடத்தை பாதுகாவல் மற்றும்
சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,
வடமாகாணம்

# பெறுகைக்கான அழைப்பு

## சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லமும் - அச்சுவேலி மற்றும் அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் கைதடி ஆகிய இல்லங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும் - 2020/ 2021


1. வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த உலர் உணவுப் பொருட்கள், மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| நிறுவனங்கள் | பெறுகை இல | உத்தரவாதமுறி பணம் |
|---|---|---|
| சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லமும் - அச்சுவேலி | NP/30/02/02/Food/ CS/ 2020 | 100,000.00 |
| அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் கைதடி | NP/30/02/02/Food/ SRH/ 2020 | 80,000.00 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. பொருத்தமான உத்தரவாதமுறி பெறப்பட்டு பெறுகையுடன் இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும். உத்தரவாத முறி பணம் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
4. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.**2000/=** னை காசாக செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் **18.09.2020** தொடக்கம் **02.10.2020** வரையான காலப்பகுதியில் காலை 09.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் **29.09.2020** காலை 11.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
5. விலைக் கேள்விகள் **05.10.2020**ந் திகதி காலை 11..30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இவ் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 05.10.2020 திகதி காலை 11.30 மணிக்கு விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021-2228321)
7. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ. குருபரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE



# கேள்வி கோரல்
## கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபை வளாகத்திற்கு 200KVA வலுவுள்ள ஜெனரேட்டர் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக 2020.10.08ம் திகதி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காசுப் பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் வேண்டுதல் கடிதம் மற்றும் வியாபாரம் பெயர் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

| | உருப்படி | கேள்வி தொடர் இலக்கம் |
|---|---|---|
| 01 | 200 KVA வலுவுடைய ஜெனரேட்டர், (கண்டி மாநகர சபை வளாகத்தில் தற்போது 30 KVA வலுவுடைய ஜெனரேட்டர் ஒன்று பிரதான பலகைக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ளதுடன், மாநகர வளாகத்தின் செயற்பாட்டு வேளையில் முழுமையான வலுவை பயன்படுத்துவதற்கு அது போதுமானதாக இல்லை என்பதால் 200 KVA வலுவுடைய புதிய ஜெனரேட்டரை வழங்கி, அவ் இடத்திலேயே அல்லது அதற்கு அருகிலுள்ள இடத்தில் பொருத்த வேண்டியதுடன், தற்போதுள்ள ஜெனரேட்டரை கழற்றி அவ் இடத்திலிருந்து அகற்றித்தரல் வேண்டும். | FB/S/PC/06/GEN/PA02 |

| இலக்கம் | கேள்வி தொடர் இலக்கம் | FD/S/PC/06/GEN/PA 02 |
|---|---|---|
| 01 | கேள்வி ஆவணத்தின் விலை | 1. ரூ. 1080.00 (சகல வரி அடங்கலாக)<br>● கண்டி மாநகர சபையின் காசாளரிடம் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இல்லையெனில்<br>● காசுக் கட்டளை ஆயின் "மாநகர ஆணையாளர், கண்டி" என்ற பெயரில் செலுத்தி 2020.10.07 வரை மாத்திரம் அனுப்புதல் வேண்டும். |
| 02 | கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் ஆரம்பிக்கும் திகதி | 2020.09.21 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் |
| 03 | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் இறுதித் தினம் மற்றும் நேரம் | 2020.10.07 பி.ப. 2.45 வரை |
| 04 | கேள்வி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2020.10.08 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு |
| 05 | கேள்விப் பிணை | இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 06 மாதம் செல்லுபடியாகும் கால எல்லையுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பெறுமதியின், 100,000/- பிணை முறியொன்றை உருப்படிக்காக வேறு வேறாக. "மாநகர ஆணையாளர் கண்டி" என்ற பெயில் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 06 | கேள்வி ஆவணங்களை திறக்கும் நாள், இடம் மற்றும் நேரம் | 2020.10.08 மு.ப. 10.00 இற்கு நகர மண்டபத்தில் இவ்வேளைக்காக கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதி நிதிகளுக்கு சமுகமளிக்கலாம். |
| 07 | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் இடம் | மாநகர வழங்கல் பிரிவு, மாநகர சபை, கண்டி. |
| 08 | பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இடம் | பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து 2020.10.08 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் பிரதம மாநகர கணக்காளர் பொறுப்பில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். |

விலைமனுக்கள் பற்றிய இறுதித் தீர்மானம் மாநகர சபைக்கு உரியது.

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் மேலதிக விபரங்களை.

இதற்காக கணக்காளர் (வழங்கல்கள்) இன் தொலைபேசி இலக்கம் 071-8014804 ஊடாக மற்றும் பிரதம மாநகர பொறியியலாளரின் தொ.பே. இல. - 071-0250065 ஊடாக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**2020.09.16**

**சந்தன தென்னக்கோன்**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை,**
**கண்டி.**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு
## சுதேச மருத்துவம்/ ஆரோக்கிய சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு அரச தனியார் கூட்டாண்மை வாய்ப்பு

சுதேச மருத்துவ நிறுவனமான கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வே நிறுவனம் (GWAI) தேசிய பல்கலைக்கழகம் ஒன்றாக தரமுயர்த்தப்படும் என்பதோடு அதற்கு அமைச்சரவை அமைச்சர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சுற்றுலாத் துறைக்கு சுதேச மருத்துவம்/ ஆரோக்கிய சுற்றுலா சேவைகளை வழங்கும் அரச கொள்கை அடிப்படையில் எதிர்கால கற்கை திட்டங்களில் சுதேச மருத்துவம்/ ஆரோக்கிய சுற்றுலா கிளைகளை விரிவுபடுத்த அது தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்றுமதிச் சந்தைகளுக்காக சுதேச மருத்துவ உற்பத்திகளை மேம்படுத்தல், எதிர்கால சுதேச மருத்துவ நிபுணர்களுக்கு பயிற்சி அளிப்பது மற்றும் ஆரோக்கிய மற்றும் ஆன்மீகக் கல்வியை மேம்படுத்துவது வரவிருக்கும் பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

அரசாங்கத்தின் நோக்கங்களுடன் பணியாற்றும் கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத நிறுவனம், ஓர் உண்மையான பணிச்சூழலில் அதிகம் நடைமுறை கொண்டதாக எதிர்கால திட்டங்களை விரிவுபடுத்த எதிர்பார்த்துள்ளது. கல்வி மற்றும் பணிச்சூழலை ஒருங்கே உருவாக்குவதற்கு, அரச தனியார் கூட்டாண்மை (PPP) வடிவத்தில் முதலீட்டுக்கான தேவையான வசதிகளுடன் தனியார் துறைக்கு GWAI அழைப்பு விடுக்கிறது. கல்விப் பணிகளுக்கான பௌதீக ரீதியான வசதிகள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கும் 'இஸட்' புள்ளிக்கான நடைமுறை செயற்பாடுகள் இந்தக் கூட்டாண்மையில் உள்ளடங்கும்.

இந்த நோக்கத்திற்காக அரச தனியார் கூட்டாண்மையை கருத்தில் கொண்டு பின்வரும் விடயங்களை பூர்த்தி செய்ததன் குறைந்தபட்ச தரத்துடன் சுதேச/ ஆயுர்வேத/ ஆரோக்கிய வசதிகளுடன் சர்வதேச சுற்றுலாப்பயணிகளுக்கு பணியாற்றும் தனியார் துறையிடம் இருந்து கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத நிறுவனத்தினால் ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI – முன்மொழிவு) விடுக்கப்படுகிறது.

- சர்வதேச சுற்றுலா சந்தையை தளமாகக் கொண்டு நிறுவப்பட்ட சுதேச மருத்துவ/ ஆரோக்கிய சேவைக்கான சர்வதேச சுற்றுலா பயணிகளுக்காக சேவை புரியும் ஒரு நிறுவனம்/ அமைப்பாக இருத்தல்.
- கடந்த காலத்தில் (2016-2018) குறைந்தபட்சம் ஆண்டுக்கு 300-500 சர்வதேச சுற்றுலா பயணிகளுக்கு பணியாற்றி இருத்தல்.
- தற்போது சுதேச மருத்துவம்/ ஆரோக்கிய சுற்றுலாவுக்காக 300 மில்லியன் ரூபா முதலீட்டில் குறைந்தபட்சம் 100 அறைகள் அல்லது தங்குமிடங்களை கொண்டிருத்தல்.
- வர்த்தகப் பதிவு (BR), இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) பதிவு மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான ஆயுர்வேத/ ஆரோக்கிய வசதிகளுக்காக தேவைப்படும் வேறு பதிவுகளை தற்போது பெற்றிருத்தல் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).
- குறைந்தபட்சம் 15-20 ஆண்டுகள் அல்லது 2021 தொடக்கம் இந்த நோக்கத்திற்காக அரச தனியார் கூட்டாண்மையின் கீழ் நீண்ட காலத்திற்கு GWAI உடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வர இணங்குதல் வேண்டும்.

**இந்த முன்மொழிவை** (EOI) மேற்கொள்ளும் நிறுவனம்/ குழுமம், இணைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சகோதர நிறுவனங்கள் மற்றும் ஏனைய முயற்சிகளின் செயற்பாடுகள் சுதேச மருத்துவ/ ஆயுர்வேத/ ஆரோக்கியத்துடன் தொடர்புபட்டதாக இருத்தல் வேண்டும். கீழுள்ள பட்டியலில் அடுத்து வரும் A, B, C, D பிரிவுகள் முன்மொழிவின் இரண்டாவது பகுதியாக அமையலாம். மதிப்பீட்டு வசதிக்காக அதே வரிசையில் அமைவது விரும்பத்தக்கது. எந்த ஒரு மேலதிகமான தொடர்புடைய மற்றும் ஆதரவான தகவல் மற்றும் பரிந்துரைகளையும் முன்மொழிவில் ஓர் இணைப்பாக சேர்க்க முடியும். EOI முன்மொழிவு இணைப்புகளின் பட்டியலுடன் யக்கல, GWAI/ பணிப்பாளருக்கு நிறுவனக் கடிதம் ஒன்றில் முன் பக்க குறிப்பு ஒன்றையும் எழுதுதல் வேண்டும்.

**A. கூட்டாண்மையுடன் கிடைக்கப்பெறும்/ பகிரும்/ ஒதுக்கப்படும் தரை இடம் மற்றும் வசதிகள் (குறைந்தபட்ச தேவைகள் மற்றும் வாய்ப்புகள் எதிர்பார்க்கப்படுகிறது)**

A1- நிர்வாகம் (அலுவலகம்) 200-350 சதுர அடி அல்லது அதற்கு மேல்
A2- கல்விசார் பணி (வகுப்புகள்) 900-1100 சதுர அடி அல்லது அதற்கு மேல்
A3- பொது வசதிகளுக்கான இடம் (நூலகம், கற்கை பகுதி, பொது கழிவறை முதலியன)
A4- குறைந்தபட்சம் 60 பேருக்கான மாணவர் தங்குமிடம் (ஆண் மற்றும் பெண்) மற்றும் அவர்களின் பொதுவான தேவைகள்
A5- கல்வியாளர்களுக்கான தங்குமிடம்
A6- கற்கையின்போது தொழில்சார் வெளிப்பாட்டை பெறுவதற்கு மாணவர்களுக்கான ஏற்பாடுகள் (மாணவர் எண்ணிக்கை)
A7- இறுதி ஆண்டு மாணவர்களுக்காக (அதிகபட்சம்) கிடைக்கப்பெறும் சாத்தியமான வேலைவாய்ப்புகள் (மாணவர் எண்ணிக்கை)
A8- தளபாடம், கார் முதலிய அசையும் சொத்து மற்றும் தகவல் தொடர்பு பகிர்வுக்கான வாய்ப்பு
A9- துப்புரவு, அகற்றும் செயற்பாடுகள் மற்றும் தேவை அடிப்படையில் பாதுகாப்பு போன்ற வேறு எந்த வசதிகளையும் பகிர்தல்/ பணியமர்த்தும் வாய்ப்பு

**B. முதலீட்டாளர்களின் தற்போதைய திறன் மதிப்பீடு - சுதேச மருத்துவம்/ ஆயுர்வேத மருத்துவமனை மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவுக்காக தற்போதுள்ள அனைத்து வசதிகளும்.**

B1- சுற்றுலா பயணிகள் மற்றும் அவர்களின் இடங்களுக்காக செயற்படும் விருந்தினர் அறைகளின் எண்ணிக்கை (பல்வேறு இடங்களில் இருந்தால்)
B2- சுற்றுலா பயணிகளுக்கு வழங்கும் சிகிச்சை வசதிகளின் வகை மற்றும் எண்ணிக்கை (வசதி, திறன் மற்றும் இடம்)
B3- வீட்டில் சிகிச்சைகளுக்காக சொந்தமான மருத்துவ உற்பத்தி/ ஏற்பாடு மற்றும் மருந்துகள்
B4- விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கான சொந்தமான மருத்துவ உற்பத்தி/ ஏற்பாடு மற்றும் மருந்துகள்
B5- 2018 முடிவில் நிறுவனம்/ குழுமத்தின் மொத்த முதலீட்டு பெறுமதி
B6- B2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தங்குமிடம் மற்றும் சிகிச்சைக்காக (2016, 2017 மற்றும் 2018) பேணப்பட்ட சராசரி தங்குமிட அளவுகள்
B7- 2018 முடிவில் ஊழியர்களின் எண்ணிக்கை i. முகாமைத்துவம் ii. முகாமைத்துவம் அல்லாத, iii. ஒப்பந்தம், பயிற்சி/ உள்வாங்கப்பட்டோர்

**C. வெளிநாட்டு மாணவர்களின் உள்வாங்கல் உட்பட A1-A7 இல் குறிப்பிடப்பட்ட வசதிகளை எவ்வாறு விரிவுபடுத்த முடியும்? (2023 தொடக்கம் - கட்டம் II)**

C1- அதே இடம் (இடம் மற்றும் வசதிகள்)
C2- மாற்று இடம் ஒன்றில் (இடம் மற்றும் வசதிகள்)

**D. உங்களது முன்மொழிவு தேர்வு செய்யப்பட்டால் (ஏதாவது) சிறப்பு பரிசீலனைகள்/ பரிந்துரைகள்**

D1- நிபந்தனைகள்
D2- விதிகள்
D3- வழிகாட்டல்கள் அல்லது கொள்கைகள்
D4- பயன்தரக் கூடியதும் தொடர்புடையதுமான அரச தனியார் கூட்டாண்மையுடன் சேர்க்க விரும்பும் வேறு வசதிகள்
D5- வெளிவாரி பட்டதாரிகள் அல்லாத, முதுமாணி பட்டதாரிகள் மற்றும் தொழில்துறை பயிற்சியாளர்களுக்கான கற்கைகள்/ நிகழ்ச்சிகள் பற்றிய ஆலோசனை/ பரிந்துரைகள்

குறிப்பு: நிதி முன்மொழிவு பிரதான முன்மொழிவுடன் (EOI) சேர்ந்து தனியான முத்திரை இடப்பட்ட கடித உறையில் சமர்ப்பித்தல் வேண்டும் - (பிரச்சினையற்ற கூட்டு சொத்துகள் மற்றும் எந்த ஒரு கட்டணங்கள் அல்லது செலவு பகிர்வுகள் முதலியவற்றை தனியாகக் குறிப்பிடவும்)

A, B, C மற்றும் D பிரிவின் தகவல், கவர்ச்சிகரமான கோட்பாடு மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளுடன் ஒத்துழைக்கும் விருப்பு போன்ற போட்டி அடிப்படையில் தேர்வு இடம்பெறும். தேர்வு செய்யப்பட்ட முன்மொழிவுகளுக்காக மாத்திரமே நிதி முன்மொழிவு கருத்தில் கொள்ளப்படும்.

- வழங்கப்படும் தகவல்களின் இரகசியம் பாதுகாக்கப்படும் என்று உறுதி அளிப்பதோடு அரச தனியார் கூட்டாண்மை தேர்வு நடைமுறைக்காக மாத்திரமே பயன்படுத்தப்படும்.
- தேர்வு செய்யப்பட்ட அபேட்சகருடன் மாத்திரமே GWAI/ சுதேச பல்கலைக்கழகம் தொடர்பு கொள்ளும்.
- ஆர்வ வெளிப்பாட்டு அழைப்புக்கு முன்னரான பொதுவான சந்திப்பு 2020 ஒக்டோபர் 1ஆம் திகதி மு.ப. 10.30 க்கு யக்கலவில் (GWAI) ஏற்பாடு செய்யப்படும்.
- EOI தேர்வு மற்றும் அதன் அரச தனியார் கூட்டாண்மை நிபந்தனைகள் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் உரிமை GWAI/ பல்கலைக்கழகம் சார்ந்தது.

முன்மொழிவு 2020 ஒக்டோபர் 9 அன்று பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் யக்கல, கண்டி வீதி, GWAI, பொது நிர்வாகம், பிரதிப் பதிவாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தாமதித்து கிடைப்பவை மற்றும் பூர்த்தி செய்யப்படாத முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். முன்மொழிவுகளை தேர்வு செய்வதற்கான உரிமை GWAI கொண்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு திரு சம்மிக்க அவர்களை தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி 071 803 6122, மின்னஞ்சல்: **dulaksha.shammika@gmail.com**) (வேலை நாட்களில் மாத்திரம் 8.30-4.00இற்கு இடையே).

**தகுதிவாய்ந்த அதிகாரி**
**கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வே நிறுவனம்**
**யக்கல**
2020, செப்டெம்பர் 19

# சிறு விளம்பரம்

## வேலைவாய்ப்பு



312

### வெற்றிடங்கள்
**தொழில் நுட்பம்**

டயர் வேலை தெரிந்தவர்கள் தேவை. சாமர என்டர்பிரைசஸ் கம்பஹா. 077 3076226. 056745



320

### வெற்றிடங்கள்
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

தச்சன்மார்கள் தேவை. (Carpenters) உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படலாம். தொடர்பு கொள்ளவும் 0713255329 056177

### அறிவித்தல்
2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், விடுக்கப்படும் அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:
**யுலயிப் லங்கா பிறைவட் (லிமிட்டட்)**

பதிவிலக்கம்: **பிவீ 00226711**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **2020.09.01**

பதிவு முகவரி:
**இல.69, பழைய நீர்கொழும்பு வீதி, கனுவன, ஜா-எல.**

**பணிப்பாளர்**

### அறிவித்தல்
2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், விடுக்கப்படும் அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:
**நிவ்வோ (ஈ)கொம் இன்டர்நெஷனல் பிறைவட் (லிமிட்டட்)**

பதிவிலக்கம்: **பிவீ 00226383**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **2020.08.26**

பதிவு முகவரி:
**இல.69, பழைய நீர்கொழும்பு வீதி, கனுவன, ஜா-எல.**

**பணிப்பாளர்**

2007ஆம் 7 ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1)ஆம் பிரகாரம் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**புரொப்பெஷனல் சைக்கொலொஜிக்கல் கவுன்செலர்ஸ் அசோஷியேஷன் (கரண்டி) லிமிட்டட்**

கூட்டிணைப்புத் திகதி **03.01.2020**

பதிவிலக்கம் **PV 00219075**

பதிவு முகவரி:
**இல.176/A/1, விஜய மாவதா, துளை, அதுருகிரியா**

**கம்பனி செயலாளர்**

### அறிவித்தல்
2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9ஆம் பிரிவின் கீழ், விடுக்கப்படும் அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:
**அக்ரோநெஸ்ட் (பிறைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்:
**PV 00227407**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **2020.09.15**

பதிவு முகவரி:
**106, குயீன்ஸ் லேண்ட் கிரசன்ட், வைத்யா வீதி, தெஹிவளை**

**செயலாளர்**

### அறிவித்தல்
2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**டிரெஸ்ஸி (பிவீடி) எல்டி**

பதிவிலக்கம்: பிவீ 00227079

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.09.08

பதிவு முகவரி:
இல. 163/B/1, பண்டாரநாயக்க மாவத்தை, அஸ்கிரிய, கம்பஹா.

**பணிப்பாளர்**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**தேசிய கல்வி நிறுவகத்தின் மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனு கோரல்**

மேற்படி தலைப்பில் 2020 செப்டெம்பர் 04ஆம் திகதி பிரசுரமான விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்விக் கோவை இலக்கம் "NIE/LP/2020/62" எனத் திருத்தப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 687, ரைஸ்மில் வீதி, கட்டுநாயக்க என்ற முகவரியில் வசிக்கும், MALANAIDELAGE SILWESTRINE PRIYALAL FERNANDO (தேசிய அடையாள அட்டை இல.612970211x மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் N7603103 ஆகிய நான், இலக்கம் 687, ரைஸ்மில் வீதி, கட்டுநாயக்க என்ற முகவரியில் வசிக்கும், FRANCISCA FELICIA WEERASINGHE (தேசிய அடையாள அட்டை இல.627421281v) என்பவருக்கு வழங்கப்பட்டதும் 2007.09.04ஆம் திகதி குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தில் KWT/CONS/2007/POA/98 என்ற இலக்கமுடையதும், பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் அத்தியாயம் 687, பக்கம் 103, தினப்புத்தக இலக்கம் 9747இன் கீழ் பதிவுசெய்யப்பெற்றுள்ளதுமான அற்றோணி தத்துவமானது, உடன் செல்லுபடியாகும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை பொதுமக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இதன் பின்னர் என்சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களிற்கு நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

**திகதி 2020.09.17**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

## நிதியமைச்சு
## தேசிய லொத்தர் சபை

**ஒரு வருட காலத்திற்கு தேசிய லொத்தர் சபைக்கு கணனி சார்ந்த சீட்டிழுப்பிற்காக (கொவிசெத, சுபிரி வாசனா, வாசனா சம்பத, ஜாதிக சம்பத, மெகா பவர், தன நிதானய, செவன [சீட்டிழுக்கப்படும்] நீரோகா மற்றும் தருதிரி சம்பத) லொத்தர் சீட்டுகளை அச்சிடுதல், வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கான பெறுகை**

மேற்படி பெறுகையுடன் சம்பந்தப்பட்ட 2020.09.21ஆம் திகதி பி.ப. 1.30 இற்கு தேசிய லொத்தர் சபையின் தலைமையகத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த கேள்விக்கு முன்னரான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது என்பதுடன், கேள்விக்கு முன்னரான கூட்டம் 2020.09.22 பி.ப. 1.30 இற்கு தேசிய லொத்தர் சபையின் தலைமையகத்தில் நடைபெறும் என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.
இது பற்றி உங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது கவலையை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக்குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு-01.**
**தொலைபேசி: 011-4607019**

## காணியை அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தல்
### காணி எடுத்தற் சட்டம் (460ம் அத்தியாயம்)
### 07ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இலக்கம் : ஹங்கு/பிசெ/3/2/1/119
காணி அமைச்சு குறிப்பு இலக்கம் : 4-3/7/2019/HW/194

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை தென்னேகும்புர, ரிகில்லகஸ்கட - இராகலை (B-413) வீதியின் 40/2ஆம் இலக்க பாலத்தை நிர்மாணிக்கும் பொருட்டு அரசு எடுத்துக்கொள்வதற்கு உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2193/15 மற்றும் 16.09.2020ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் IIIஆம் பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| அமைவு | காணியின் பெயர் | வரைபடம் மற்றும் காணித்துண்டு இலக்கம் |
|---|---|---|
| நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவின் உடகம்பஹ கோரளை, இலக்கம் 510 உடபதியபெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவின் பதியபெலல்ல எனும் கிராமத்தில் | அம்பலமேகும்புர அம்பலமேகும்புர | நில அளவையாளர் நாயகத்தினால் சான்றுபடுத்தப்பட்ட இலக்கம் மு.பீ.நு.3423 மற்றும் 2020.08.26ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் 0.1604 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டு இலக்கம் 01 முதல் 10 வரை |

**ஐ.எம்.சேனாநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**ஹங்குரான்கெத்த**

**2020.09.17ஆந் திகதி**
**ஹங்குரான்கெத்த பிரதேச செயலகம்.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை
### ஏலவிற்பனை அறிவித்தல்
### அகற்றப்படாத பொருட்களின் விற்பனை
**ஏலவிற்பனைத் திகதி : 29.09.2020**
**ஏலவிற்பனை இல.: LD/S/A/2020-01(SP)**

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியசாலைகள் மற்றும் திறந்தவெளிகளில் வைக்கப்பட்டுள்ள பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்து அகற்றுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் கோரப்படுகின்றன.

**ஏலவிற்பனை இல.: .: LD/S/A/2020-01(SP)**

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | இரசாயனங்கள் |
| மோட்டார் உதிரிப்பாகங்கள் | பஸ் அனுமதிப்பத்திர இயந்திரம் |
| செரமிக் தரை ஓடுகள் | மின்னியல் துணைப்பாகங்கள் |
| கம்பளம் | உணவு வகைகள் |
| Plain Aluminium Foil | செரமிக் சுகாதாரப் பொருட்கள் |
| Nivoplan | மின்சார சைக்கிள்கள் |
| Mapewall Ready-mix | பாவிக்கப்பட்ட சுத்தம் செய்யப்பட்ட கண்ணாடி போத்தல்கள் |
| மார்பல் புளொக்குகள் | மோட்டார் சைக்கிள்கள் |
| House Hold Items – Equipments | ஏனைய வர்த்தகரீதியிலான பொருட்கள், இன்னும் பலவும் |

2020.09.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து 2020.09.25ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 250 ரூபா + பெசேவ ஆகியவற்றைச் செலுத்திய பின்னர், கொழும்பு-01, ஒல்கட் மாவத்தை, 11ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனைப் பட்டியல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு **www.slpa.lk** என்ற இணையதளத்தை பார்வையிடவும்.

**பிரதம முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
**19.09.2020**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல. 11, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-01.**

## பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம்
### சுதுவெலிபொத்த தோட்டத்தில் ரப்பர் மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான பத்தேகம, எல்லகந்தவில் அமைந்துள்ள சுதுவெலிபொத்த தோட்டத்தில் அடையாளமிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள் 1661 ஐ கழற்றி அகற்றுவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2020.09.21 முதல் 2020.10.12 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை காணியில் மரங்களை பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன், குறித்த காலத்திற்குள் அரச வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 இற்கு இடையில் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் தலைமையகத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படும் ரூபா 5,000.00 மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 500.00 தொகையைச் செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை கொள்வனவு செய்யலாம்.

கேள்வி ஆவணங்கள் 2020.10.13 பி.ப. 2.00 வரை மாத்திரம் ஏற்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடிவதுடன், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சுதுவெலிபெத்த தோட்டத்தில் ரப்பர் மரங்களை கொள்வனவு செய்யும் கேள்வி"** என்று குறிப்பிடுதல் வேண்டும். பொறியிடப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 2020.10.13 பி.ப. 2.00 இற்கு முன் அனுப்புதல் வேண்டும். இக்கேள்வி வழங்கல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.


**தலைவர், பெறுகைக்குழு,**
**பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம்,**
**இல. 02, புல்லர்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-07.**
**0112-554976 (தோட்ட இலக்கம்)**
**0112-581690**

# நாராயணசாமியின் நினைவஞ்சலி கூட்டம்



"மஞ்சள் குங்குமம்" என்ற இலங்கைத் திரைப்படத்தின் தயாரிப்பாளரும் ஆமர் வீதி அம்பாள் கபே உரிமையாளரும் சமூக சேவையாளருமான அமரர் தொழிலதிபர் ஜி. நாராயணசாமியின் நினைவஞ்சலிக் கூட்டமும் பகல் போஷன நிகழ்வும் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு 13, புதுச்செட்டித் தெருவிலுள்ள சிறி ராம் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் தெரிவித்தார்.

இதில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், தொழிலதிபர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.





கண்ணகி கலாலயம் டவர் மண்டப நாடக விழாவில் "கொவிட் 19 வைரஸ்", 'நிதர்சனம்' ஆகிய இரு நாடகங்களை மேடையேற்றவுள்ளது. இதற்கான ஆரம்ப பூஜை கொழும்பு கெத்தாராம அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நாடகங்களை பல்துறைசார் ஆ. இளங்கோவன், கதை, வசனம் எழுதி இயக்குவதுடன் பிரதீப் குமார் தயாரிக்கின்றார்.

# கலை நிகழ்வுகளின் மூலம் இன ஒற்றுமையை ஏற்படுத்தலாம்

## பிரதேச செயலாளர் திருமதி காஞ்சனா குணவர்தன

*(வடகொழும்பு தினகரன் நிருபர்)*

இருவேறு சமூகங்களின் கலாசாரம், பண்பாடுகளை வெளிப்படுத்தவும், அறிந்து கொள்வதற்கும் இவ்வாறான கலை நிகழ்வுகள் இடம்பெறல் அவசியமாகும். சிங்கள மொழி மூலமாகவும், தமிழ் மொழி மூலமாகவும் இம்மேடையில் கவிகள் மிகவும் தெளிவாக பாடப்பட்டன. இரு இனத்தவர்களும் மிகவும் அமைதியாக இக் கவியரங்க நிகழ்வுகளை ரசித்தீர்கள்.

இவ்வாறான கலை நிகழ்வுகளின் மூலம் இந்நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என கொழும்பு பிரதேச செயலகத்தின் செயலாளர் திருமதி காஞ்சனா குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தமிழ், சிங்கள மொழி மூலமான கவியரங்கத்திற்கு விசேட அதிதியாக கலந்துகொண்டு பேசிய போதே கொழும்பு பிரதேச செயலகத்தின் செயலாளர் திருமதி காஞ்சனா குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கவியரங்கு செயலகத்தின் கலாசார அலுவலர் திருமதி கிறிஸ்டி ரோஸ் தலைமையில் இடம்பெற்றது. தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் ஒரு மொழியின் உச்சத்தை இவ்வாறான கவியரங்கு மூலமாக மக்கள் அறிந்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன்மூலமாக இன ஒற்றுமை வளர்ச்சி பெறுவதுடன் தமிழ், சிங்கள மொழிகளின் வலிமையையும் உணரக்கூடியதாக உள்ளது. இவ்வாறான கலை சார்ந்த நிகழ்வுகள் மனதுக்கு அமைதியை விதைக்கின்றது. இக்கவியரங்கில் கவிஞர் பாடியும், நடனங்களை மேடையேற்றியும் கலைஞர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். இவ்வாறான நிகழ்வுகள் எமது இரு இனத்தின் கலாசாரத்தை அடையாளப்படுத்துவதுடன் கலைஞர்கள் தங்களின் திறமையையும் வெளிப்படுத்தினர்.

இலங்கையர் என்ற உணர்வை இக்கவியரங்கு அடையாளம் கொள்கிறது. எமது அனைவரின் சமூக அடையாளமாக திகழும் இவ்வாறான கலை வடிவங்களை பாதுகாத்து, எமது பாரம்பரிய கலை கலாசாரங்களை பாதுகாப்போம் எனவும் தெரிவித்தார்.





தந்தை செல்வா நற்பணி மன்றம் ஆண்டு 5 மாணவர்களின் நலன்கருதி புலமைப்பரிசில் கருத்தரங்கு ஒன்றை கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் அண்மையில் நடாத்தியது. இதில் விவேகானந்தா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சந்திரிக்கா, கலைமகள் வித்தியாலய உப அதிபர் திருமதி தேவயோகம், மட்டக்குளி கிராம சேவையாளர் ஷாந்தினி மோஹன், ஜிந்துப்பிட்டி கிராம சேவையாளர் H.P.P. பெரேரா, பான் ஏசியா வங்கி முகாமையாளர் இனேஷ் ஆகியோர் பொற்பணி செம்மல் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருப்பதையும், பாடசாலை அதிபர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், பொதுச் செயலாளர் S. K. தளையரட்னம், லயன் சுதாகரன், மாளிகாவத்தை கிராம சேவையாளர் உருத்திரன், தந்தை செல்வா அறநெறி பாடசாலை ஆசிரியர் ஈஸ்வரலிங்கம், மன்ற நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் அருகில் இருப்பதையும் படங்களில் காணலாம்.

புதுப்புனல்

- ஷம்ஸ் பாஹிம்

# வரட்சி



கடல் குளமாகி விட்டது
ஆறுகள் வீதிகளாகிவிட்டது
கிணறுகள் குப்பை தொட்டியாகிவிட்டது
காடு கறுவாடாகிவிட்டது
பூமி தீஞ்சு மணக்குது
ஓ
சூரியன்
தென்னையின் தலையிலிருந்து
சருக்கு கீழே விழுகிறதா?
வெப்பத்தால்
பேனாவின் மை உறைந்து விட்டது

ஓடும் செங்குருதிக்கும்
இந்நிலையோ
கருவாடு சருகானது
சருகுகள் சாம்பலானது
சாம்பல்
அரைத்த மாவு
அரைபட்டதாயிற்று
வரட்சி என்ற சொல்லை
காப்பாற்றுவோம்

**அ. கா. மு. றிஸ்வின்**
மூதூர் 01

# பறவையின் சுதந்திரம்



நீ பறந்து கொண்டிருக்கிறாய்
உன் பாதையில்
தடைகளில்லை

கண் விழித்தால்
கூவிக் கரைவதும்
பொழுது புலர்ந்தால்
உணவு தேடுவதும்
தேடியதை பகிர்ந்துண்ணுவதும்
வாழ்வாக...
உனக்கு
நிரந்தர இடமுமில்லை
ஊர்கள் யார்
உனக்குச் சொந்தம்
எங்கும் இருப்பிடம்
எதிலும் சுதந்திரம்

சிறு சிறு சண்டை
சில நொடி மோதல்
ஒரு சில பொழுதே
பின்னர்
ஒற்றுமையோடு
பறந்து மகிழ்வீர்

பறிந்து உண்ணும்
பழக்கமொன்றே
இறையுனக்களித்த

நிரந்தரத் தொழிலாம்
அதனால்
எவரைப் பற்றியும்
அச்சமுமில்லை

நாளைச் சென்று
சேமிக்கின்ற
தொழிலுமில்லை
பசிக்கு மட்டும்
பறந்து திரிவாய்
மனிதர் வீசும்
எச்சிலுக்காக

மாடிவீடும் கோடிசேர்ப்பும்
பேராசையில்லா
பண்பே கொண்டாய்

எவ்வளவு தேடியும்
எமக்குப் போதவில்லை
தேடும் ஆசையே
மனிதன் தேயுமட்டும்
போவதேயில்லை
நீயும் வாழ்கிறாய்
நாமும் வாழ்கிறொம்
ஆனால்....
உனது சுதந்திரம்
எங்களுக்கில்லை

**மருதூர் ஜமால்தீன்**

# (கவி)தை மகளே நீ வருக



நில விழி மாணிக்க நித்திலமே எழிற்
கோல இசைமீட்டும் கோகிலமே மாலை
மதியத்து வான் முகட்டில்
வரைந்த பொற சித்திரமே; வெண்
பாலை நிகர்த்த பல்வரிசை உளஇமல்லாம்
ஓலம் இடுகுதடி; உன் வரவு அது கண்டு

வேலொத்த கூர்மை, விழும் சொற்கள் சுருதியென
யாழ் மீட்டும், தேன்சாட், பாழ் கொண்ட செஞ்சினரை
தாலாட்டி மகிழ்விக்கும், தங்கத்தமிழ் மகளே
ஆர்வரைந்த ஓவியமோ அழுதூறும் காவியமோ?
பேர் பெற்ற தவுஞானி, பெரியோர் முனிவரெல்லாம்
நேர் கொண்டு ஈர்க்கும் நிறைவான வான்மதியே
கார் குழல் ஆல் விழுதோ? கலை ஓம்பும் கவி மகளோ?
தையலான் உந்தன் தளிர்மேனி வெண்பா வாய்
எண்சீர் விருந் எதுகை, சேர் மோனைக்குள்
கண் சிமிட்டும், காரிகையே கவி வரையும் தூரிகையே
பண்ணாய் சமைந்து நற்பா வாய் இசையாகி

காற்சலங்கை கலகலக்க, கைவளையல் தாளமிட
ஆர்ப்பரித்து இருப்பதில் அடியெடுக்கும் தைமகளே
காப்பதற்காய் அவதரித்த கற்பரசி கண்ணகியாய்

சூர்ப்ப நகையாகி சுதந்திரத்தாய் திருநாட்டின்
ஏர்ப்புடைய சமாதான எடுப்புக்களை எல்லோரும்
ஒரு கொடியில் பூத்த ஒரு தாயின் புதல்வரென
போற்றிப் புகழத்தற்கு புதுப்பொலிவு முகம்காட்டி
ஆர்ப்பரித்து தை மகளே! ஆடிவா, உன்வரவு
நல்வரவாய் அமையட்டும், நாற்றம் எடுக்கின்ற
இனவாத சேட்டைகள் இல்லாது ஒழியட்டும்
வாழ்த்துக்கள் அம்மாத வரவேற்றோம் நீ வருக.

கவிப்புனல்
சாய்ந்தமருதூர்
**கேயெம்மே அஸீஸ்**

# அவள் ஒரு அநாதை...!!



தாயோடு பிறந்தாள்
தந்தையோடு வளர்ந்தாள்
காலங்கள் ஓட சோகங்கள் சுமந்தாள்
பூமியில் பூத்த பூ அல்லவா
வாடும் முன் மணந்தாள் மகிழ்ந்தாள்...!!

காதல் கொண்டாள் காமம் கண்டாள்
உடல் ஒன்றில்
இன்னுமோர் உயிர் வாங்கினாள்
சுமந்தாள் வலி சுமந்தாள்
சுமந்தாள் சந்தோசமாய் சுமந்தாள்...!!!

ஐ இரண்டு திங்கள் அன்பாக அடைகாத்து
அவள் இறந்து மீண்டும்
பிறந்து பிரசவித்தாள்...!!

பாலூட்டினாள் பசியாற்றினாள்
பாசம் காட்டி வளர்த்தாள்
கல்வி புகட்டி வளர்த்தாள்...!!

வயதை அடைந்து வளந்தார்கள்
துணை தேடி வாழ்க்கை ஒன்றில்
தொலைந்தார்கள்...

இறுதியில்
அன்பு கொடுத்தவள் ...
வளர்த்தவள் வளர்கிறாள்...
பாசம் காட்டியவள் பராமரிக்கப்படுகிறாள் ....
முதியோர் இல்லத்தில்...!!!

ஆமாம் இப்போது
அவள் ஒரு அநாதை...!!!

**அஜ்மல்**
பாலமுனை

# நிமிர்ந்து நில்!

ஆசைகளைக் குறையுங்கள் அமைதிகிட்டும்
அருவருப்பைக் குறையுங்கள் உறவு கிட்டும்
பேசுவதைக் குறையுங்கள் வெற்றி கிட்டும்
பிழைகளை குறையுங்கள் உயர்வு கிட்டும்

ஏசுவதைக் குறையுங்கள் இனிமை கிட்டும்
இழிச் செயல்களைக் குறையுங்கள் ஏற்றம் கிட்டும்
புகழ்தலைக் குறையுங்கள் நேசம் கிட்டும்
பொறாமையினைக் குறையுங்கள் புகழேகிட்டும்

விளைநிலத்தில் களைகுறைந்தால் விளைச்சல் ஓங்கும்
விடிவெள்ளி ஒளி குறைந்தால் விடியல் தோன்றும்
அளவின்றி உண்பதும் குறைந்தால் தானே
அண்டிவிடும்நோய்களைத் தடுத்தல் கூடும்

பிளவு செய்யும் சாதிவெறி குறைந்தால் மட்டும்
பேதமில்லாச் சமுதாயம் உருவாகும்
களவுகளும் ஊழல்களும் குறைந்தால் அன்றோ
கண்ணபன நம்நாடு நிமிர்ந்து நிற்கும்

கவிச்சுடர்
**கல்லொளுவை பாரிஸ்**




# 19 இல் நாட்டுக்கு சாதகமான எதுவும் நீக்கப்படமாட்டாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்திலுள்ள நாட்டுக்கு சாதகமான எதனையும் நீக்க அரசாங்கம் தீர்மானிக்கவில்லையென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அதேவேளை, 19ஆவது திருத்தத்திலுள்ள நாட்டுக்கு பொருத்தமில்லாத பாதிப்பை ஏற்படுத்தும் யோசனைகளை மட்டும் மாற்ற தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

அரசாங்கம் உத்தேசித்துள்ள 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஊடகவியலாளர்களால் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்ட நிலையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண ஆகியோர் அதுதொடர்பில் தெளிவுபடுத்தினர்.

அதற்கிணங்க, 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்களென குறிப்பிட்டுள்ள சரத்து, ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு முறை மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது தொடர்பான யோசனை, தகவலறியும் சட்டம், கணக்காய்வு ஆணைக்குழு மற்றும் திட்டமிடல் ஆணைக்குழு போன்ற யோசனைகளுக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாது என்றும் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் யோசனைகளே நீக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஜனநாயகத்தை பலப்படுத்தும் வகையில் அது போன்ற ஆணைக்குழுக்களை மென்மேலும் சாத்தியமானதாக செயற்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பில் ஆராயப்படும். 20வது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக ஜனநாயக நடவடிக்கைகளை உச்சளவில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அதேபோன்று மிக விரைவில் நாட்டுக்குப் பொருத்தமான உச்ச ளவில் ஜனநாயகத்தை பாதுகாக்கும் அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ)

# சிறுவர்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

18 வயதுக்கு குறைந்தவர்களை சிறுவர்கள் என சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கும் 18 – 22 வயதிற்கு இடைப்பட்ட வயதுடைய குற்றவாளிகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கும் நீதியமைச்சர் அலி சப்ரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

சிறுவர் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் மற்றும் இளைஞர் குற்றவாளிகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மேற்படி நடைமுறையிலுள்ள சட்டத்திற்கிணங்க பதினான்கு வயதிற்குக் குறைந்த ஒருவர் சிறுவர் எனக் குறிப்பிடப்படுவார். அதற்கிணங்க இளைஞர் குற்றவாளிகள் தொடர்பிலான கட்டளைச் சட்டத்திற்கிணங்க 16 – 22 வயதுக்குட்பட்டவர்கள் இளைஞர்களாக கணிப்பிடப்படுவர்.

மேலும் 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களினால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் தொடர்பில் நீதிமன்ற சிபார்சுக்கு இணங்க நன்னடத்தை திணைக்களம் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நன்னடத்தைப் பாடசாலைகளுக்கு அவர்கள் அனுப்பப்படுவதுடன் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் மேற்கொள்ளும் தவறுகள் தொடர்பில் நீதிமன்றத்தின் மூலம் சிறையில் அடைப்பதற்கும் இளைஞர் குற்றவாளிகளை பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுப்பவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர் உரிமை தொடர்பான கட்டளைச் சட்டத்தின்படி 18வயதுக்கு குறைந்த நபர்களை நீதிமன்ற தண்டனைக்கு உட்படுத்த முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கலான விடயங்களுக்கு நிவர்த்தி காணும் வகையில் 18 வயதுக்கு குறைந்தவர்களை சிறுவர்கள் என்றும் இக் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கும் 18 – 22 க்கும் இடைப்பட்ட குற்றவாளிகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கும் நீதியமைச்சர் அலிசப்ரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ஸ)




இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஊதுபத்திகளை ஏற்றுமதி செய்வதை மேலும் விஸ்தரிக்கும் வகையில் கனடாவுக்கு ஊதுபத்திகளை ஏற்றுமதி செய்வது தொடர்பான நிகழ்வு கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்சவின் தலைமையில் நடைபெற்றது. முதலாவது தொகுதி ஊதுபத்திகளை அமைச்சர்களான விமல் வீரவங்ச,பந்துல குணவர்தன ஆகியோர் பொதியினுள் இடுவதை படத்தில் காணலாம்.

# திறமையான வீரர்களை உருவாக்க சங்கக்கார ஆலோசனை



பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது விளையாட்டில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு புள்ளிகளை வழங்குகின்ற முறையை கட்டாயம் கடைப்பிடிப்பதோடு பல்கலைக்கழகங்கள் மூலம் தேசிய ரீதியான வீரர்களை உருவாக்குவதில் உள்ள இயலுமை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தேசிய விளையாட்டுப் பேரவையின் உறுப்பினருமான குமார் சங்கக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூர் விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய விளையாட்டு பேரவையின் உறுப்பினராக கலந்துகொண்டு குமார் சங்கக்கார கருத்து தெரிவிக்கையில், “இலங்கையில் உள்ள விளையாட்டுக்களை தரப்படுத்தி சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்கின்ற வீரர்களை உருவாக்க வேண்டும். அத்துடன் குறித்த வீரர்களுக்கு விசேட பயிற்சிகளை அளிப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இந்த கலந்துரையாடலின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில், “ஆரோக்கியமான, ஒழுக்கநெறி கொண்ட மற்றும் சக்திமிக்க சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக விளையாட்டு கலாசாரம் ஒன்றை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

விளையாட்டு என்பது இளைஞர் சமூகத்தின் மொழியாகும். கல்விக்கு இணையாக பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் பூரணத்துவமான மனிதனை சமூகத்திற்கு வழங்க முடியும். கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் அமைச்சுக்களுக்கு அதற்காக பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் உள்ள பாடசாலைகளில் விளையாட்டில் திறமைகளை வெளிக்காட்டும் பிள்ளைகளை சிறுவயது முதல் தெரிவு செய்து அவர்களுக்கு அவசியமான உரிய போசாக்கு, தேசிய மற்றும் சர்வதேச பயிற்சிகள் உள்ளிட்ட வசதிகளை வழங்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்” என தெரிவித்தார். கிராமிய பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதி கருத்து வெளியிடுகையில்,

”பின்தங்கிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்கு மைதானங்களைப் பெற்றுத் தருமாறு கேட்டாலும் அவற்றை அமைத்துக் கொடுத்ததற்குப் பின்னர் ஒழுங்காக பராமரிக்காத நிலையை பல்வேறு இடங்களில் காணமுடிகின்றது. புல் வெட்டுதல் போன்ற மிக இலகுவாக செய்யக்கூடிய பராமரிப்பு விடயங்களுக்கு பாரிய நிதி தேவையில்லை” என குறிப்பிட்டார்.

இதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்களை பராமரிப்பதற்காக தனியானதொரு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதுஇவ்வாறிருக்க, கொழும்பு – 07, டொரின்டன் மாவத்தையில் அமைந்துள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தை தியகம விளையாட்டு தொகுதி வளாகத்துடன் இணைத்து சர்வதேச தரத்தைக்கொண்ட விளையாட்டு பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

விளையாட்டு கலாசாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக சிறு பிள்ளைகள் விளையாடுகின்ற இடங்களை தேடிச் சென்று விளையாட்டு மைதானங்களை அமைக்க வேண்டுமெனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். பிரதான விளையாட்டு மைதானங்களை ஒரு நிறுவனத்தின் கீழ் நிர்வகித்தல், முழுமையான வசதிகளைக் கொண்ட விளையாட்டுப் பாடசாலைகள் 25 ஐ உருவாக்குதல், விளையாட்டு சட்டத்திற்கு புதிய முன்மொழிவுகளை உள்ளடக்குதல் மற்றும் புதிய சட்டமொன்றை தயாரித்தல், விளையாட்டின் மேம்பாட்டிற்காக தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக கடந்த மாதத்தில் தமது அமைச்சு அவதானம் செலுத்தியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். குறித்த கலந்துரையாடலின் போது சுகததாச விளையாட்டு அதிகார சபையை முழுமையாக மீளக்கட்டமைப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

ஒலிம்பிக் பதக்கத்தை வெற்றிகொள்ளக்கூடிய விளையாட்டாக இனங்காணப்பட்டுள்ள ஈட்டி எறிதல் மற்றும் இலக்கு பார்த்து சுடுதல் போன்ற விளையாட்டுக்களை பாடசாலை மட்டத்திலிருந்து மேம்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பல்வேறு விளையாட்டுக்களில் தமது திறமைகளை வெளிக்காட்டுகின்ற உலகில் ஏனைய நாடுகளில் உள்ள புலம்பெயர் இலங்கை விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு தேசிய இலச்சினையின் கீழ் ஒன்றிணையுமாறு அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்த விசேட கலந்துரையாடலில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் தேனுக்க விதானகமகே, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, தேசிய விளையாட்டு பேரவையின் உறுப்பினர்கள், விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் முன்னணி விளையாட்டு வீரர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

SINCE 1978 42nd OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
*Recognizing talent, inspiring greatness.*
Sri Lanka Telecom Mobitel உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..........

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ..........

வாக்களித்தவர் பெயர் : ..........

முகவரி : ..........

மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி **2020-09-19** இல. **28**




## இங்கிலாந்து, அவுஸ்திரேலிய வீரர்கள் 21 பேர் ஐக்கிய அரபு இராச்சியம் விரைந்தனர்

### 36 மணி நேரம் மட்டுமே தனிமைப்படுத்தல்



ஒருநாள் கிரிக்கெட் தொடர் முடிவடைந்த நிலையில், இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய வீரர்கள் 21 பேர் ஐக்கிய அரபு இராச்சியம் விரைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஐபிஎல் 2020 சீசன் இன்று (சனிக்கிழமை) தொடங்குகிறது. இதற்காக 8 அணியைச் சேர்ந்த பெரும்பாலான வீரர்கள் கடந்த மாதம் 21ம் திகதி, 22ம் திகதிகளில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய், அபுதாபி, ஷார்ஜா ஆகிய மூன்று இடங்களுக்கு புறப்பட்டுச் சென்று ஆறு நாட்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டனர். அதன்பின் கொரோனா பரிசோதனைக்குப் பிறகு பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக கரீபியன் பிரிமீயர் லீக்கில் விளையாடிய வெயின் பிராவோ, பொல்லார்டு, அந்த்ரே ரஸல், ரஷித் கான், இம்ரான் தாஹிர் உட்பட ஐபிஎல்லில் இடம் பிடித்துள்ள வீரர்கள் துபாய் சென்ற வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியா இங்கிலாந்து இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் முடிந்த கையோடு ஐபிஎல் தொடரில் இடம்பிடித்துள்ள இரண்டு அணிகளின் 21 வீரர்கள் ஐக்கிய அரபு இராச்சியம் விரைந்துள்ளனர்.

முன்னதாக அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து வீரர்கள் கட்டாயமாக ஆறு நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இதனால் முதல் ஒருவார போட்டிகளில் அவர்களால் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

ஏற்கனவே அவர்கள் இங்கிலாந்தில் பயோசெக்யூர் வளையத்திற்குள் இருப்பதால் மூன்று நாட்களாக குறைக்க வேண்டும் என இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் பிசிசிஐயிடம் வலியுறுத்தியது. இந்நிலையில் 36 மணி நேர தனிமைப்படுத்தல் போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 45 ஆவது தேசிய விளையாட்டு விழா

## நிந்தவூரில் மூவருக்கு கௌரவம்

நிந்தவூர் குறூப் நிருபர்



இலங்கையின் தேசிய விளையாட்டுத்துறை அமைச்சும், விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களமும் ஏற்பாடு செய்திருந்த 45வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த வருடம் இறுதி நிகழ்வுகள் கடந்த வருடம் அக்டோபர் 25ஆம் திகதியன்று பதுளை வின்சன்ற் டயஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பரிது வட்டம் வீசுதல் மற்றும் கபடி ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு கிழக்கு மாகாணத்திற்கு பெருமை தேடித்தந்த நிந்தவூரைச்சேர்ந்த மூவரிற்கு கடந்த (14) அம்பாறை ஹார்டி வளாக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கிழக்கு மாகாண வர்ண விழா நிகழ்வின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரரும், இலங்கை இராணுவத்தின் இயந்திரவியல் மற்றும் மின்பொறியியல் படைபிரிவின் வீரரும், தேசிய மெய்வலுனர் அணியின் வீரருமான இசட்.ரி.எம். ஆஷிக் கடந்த வருடம் இடம் பெற்ற 45 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பரிது வட்டம் வீசுதல் நிகழ்ச்சியின் இறுதிப் போட்டியில் 45.59 மீற்றர் தூரம் எறிந்து, தொடர்ந்தும் மூன்றாவது முறையாகவும் 1ஆம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார். இவர் இலங்கை மெய்வல்லுனர் தேசிய அணியில் இடம் பிடித்துள்ள கிழக்கைச் சேர்ந்த வீரர்களில் இவரும் ஒருவர் என்பதுடன், அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் இலங்கை குழாமிற்கு உள்வாங்கப்பட்டுள்ளார். மேலும் இவரது சாதனைகள் நிந்தவூர் வரலாற்றிலும், அம்பாறை மாவட்டத்திலும் முதன்மையாகவுள்ளது.

அத்துடன் இந்த விளையாட்டு நிகழ்வில் கிழக்கு மாகாணத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய கபடி அணி 2 ஆம் இடத்தைப் பெற்றிருந்தது. இதில் அவ்வணி சார்பாக கலந்து கொண்ட நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரரும், தேசிய கபடி அணி வீரரும், பாடசாலை பயிற்றுவிப்பாளருமான எம்.ரி. அஸ்லம் சஜாவும் கௌரவிக்கப்பட்டார். இவர் இலங்கை கபடி தேசிய அணியில் இடம்பிடித்த கிழக்கு மாகாண வீரர் என்பதுடன், இவ்வணியின் மிகவும் முக்கியமான (ரைடர்) வீரராகவும் திகழ்கின்றார். கடந்த 06 ம் திகதி இலங்கை கபடி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட கபடி பயிற்றுவிப்பாளர் தரப்படுத்தல் ஏ பிரிவிலும் இவர் இடம்பிடித்து கிழக்கு மாகாணத்திற்கும், அம்பாறை மாவட்டத்திற்கும், தனது சொந்த ஊரான நிந்தவூரிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்திலிருந்து இலங்கை கபடி சம்மேளனத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளர் ஏ.எல். அனஸ் அஹமட்டும் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை வரலாற்றில் முதலாவது முஸ்லிம் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன், தேசிய கபடி அணியின் மத்தியஸ்தராகவும், அம்பாறை மாவட்ட கபடி சம்மேளனத்தின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். அத்துடன் கடந்த 06 ம் திகதி இலங்கை கபடி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட கபடி பயிற்றுவிப்பாளர் தரப்படுத்தல் ஏ பிரிவிலும் இவர் இடம்பிடித்து கிழக்கு மாகாணத்திற்கும், அம்பாறை மாவட்டத்திற்கும், தனது சொந்த ஊரான நிந்தவூரிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்நிலையிலேயே இம்மூவரும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தியினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



அக்குரணை தெலும்புகஹாவத்தை வாலிபர் சங்கத்தினால் முதன் முறையாக நடத்திய 8 அணிகள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி தெலும்புகஹாவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் விளையாடிய சன்ரைஸ் சுப்பர் கிங்ஸ், டைட்டேன்ஸ் அணிகளில் சன்ரைஸ் சுப்பர் கிங்ஸ் அணி கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. போட்டித் தொடரில் சிறந்த பந்துவீச்சாளராக (டைட்டேன்ஸ்) பசானும், சிறந்த துடுப்பாட்ட வீரராக அதே அணியைச் சேர்ந்த சிஜாஸும் சகலதுறை வீரராக சுப்பர் கிங்ஸ் பஜ்ஜும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.